81

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
*No. 11*, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஞு ஜனவரி மீ 16உ [No. 3.

5-FEB 1930 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 41
2. அப்பர் (அவிநயக் கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 43
3. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாட்சிசுந்தரம் M.A., B.L. 44
4 தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 46
5. அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை (அடியார் சரிதை)
E. N. பத்மாவதி அம்மாள் B. A. 48
6. நம்மாழ்வார் வைபவம் (சுத்தாத்ம தர்சனம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 50
7. இலஞ்சிப் பாவை (ஆருடம்)
T. S. நடராஜபிள்ளை, B. A., B. L. 52
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 53
9. மதிப்புரை (நளாயினி வெண்பா) 56
10. வர்த்தமானம் 59

இன்று முதல் அனுப்பிவருகின்ற வி. பிக்களைச் சந்தா நண்பர்கள் தவக்கமின்றிப் பெற்றுக்கொள்வர் என நம்புகின்றோம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. இல்லையாதலால் அங்கிருப்பவர் உடனே தம் சந்தாவை மணியார்டர் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மானேஜர்.**

## கலா நிலயம்

### அறியாமை வேண்டப்படும்.

2.

189037

தெரிந்தனகொண்டு மேல் அறிவதற்குள பொருள் ஏவையெனத் தேர்வதே அருமையென்னு முண்மையை முன்னுள் சிறிதுணர்த்தினோம். குருட்டுக்கண் ஒளியை அறியாததுபோல் இருட்டிற்கு மஞ்சாது. கல்விமிக வுடையோர்தாமே அறியாமையுண்டென்பதை அறியக்கூடியவ ராகின்றார். ஆதலின், கற்றனைத்தும் ஊறுமறிவு தம் அறியாமை எத்துணைத்தென்று தேர்கின்றதன்றி வேறன்று. ஆயின், மேலுஞ் சில கற்பின் முன்னிருந்த அறியாமை நீங்கல் வேண்டுமே யெனின், கல்வியின் தத்துவமும் அதனின்று ஊறும் அறிவின் தத்துவமும் அவ்வகை அமைந்திருக்கவில்லை. இதற்கெதிராய், மேலே கற்கக் கற்க முன் தெரிந்ததெனப் பாவித்திருந்தவைகளும் இதுவோ அறிவென்று கரைவதுமல்லாமல், முன் தெரிந்திருப்பன முழுமையாக வேண்டுமெனின் பின் தெரிந்துகொள்ள வேண்டியன பலவாகித் தோன்றத் தலைப்படுவதாகும். நாயனார் நவின்றபடி அறிதோறு மறியாமையே கண்டவர்களாவது திண்ணம். ஆதலின் அறிஞன் எதை அறிகின்றான் என்ற வினாவிற்குத் 'தன் அறியாமையையே அறிகின்றான்'' என்னுமோர் விடையே ஏற்புடைத்தாகின்றது. எனின் மெய்க் கல்விகேள்விகளால் எய்திய அறிவு ஒன்றும் இலாதான், "எல்லாம் அறிவேன்'' என இறுமாப்பதும், சிறிதளவு கல்விகேள்வி யுடையவன், "சில வறிவேன், சில அறியேன்,'' எனப் பகர்வதும், மற்றுக் கல்வி கேள்விகளாற் சான்றவன், "ஒன்றும் யான் அறியேன்'' என அடங்கவும் நாடோறும் நாம், இவ்வுலகில் ஊடாடுபவர்பால் காண்கின்றோம் கற்றுய்ந் தடங்குவார்திற மின்னது.

நுண்ணிய புத்தியும் கல்வியின் அகலமும் வாய்ந்த ஆங்கில நாடக மகாகவி ஷேக்ஸ்பியர் என்பார் தனது பாத்திரங்களில் ஒருவனை ஹாம்லட் என்பவனைக் கொண்டு, "விண்ணிலும் இம்மண்ணுலகிலும் நண்ப, நமது தத்துவசாத்திரங்கள் நினைத்தும் அறியாதன பலவுள'' என்று சொல்வித்தபோதும் நம் நாயனார் கருத்தையே நவின்றவ ராகின்றார்.

இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்குமுன் கிரீஸ் தேசத்திலுள்ள ஏதன்ஸ் நகரில் வசித்த தத்வஞர் ஸாக்ரடீஸ் என்பவாது புகழ் அன்றுபோல் இன்றும் விளங்கியிருத்தலால் அவருரைத்த வுண்மைமொழிகள் காலதேய வேறுபாடுகளால் மாறுபடுதலின்றி நிரந்தரமானவை யென்பது நிச்சயமாகின்றது. அறியாமை தமக்குண்டென்றும், அறியாமையே இவ்வுலகத்தில் காண்கின்ற தீமைகளுக்கெல்லாம் காரணம் என்றும் கொண்டகொள்கையர் இவர். ஆங்கிலப் பயிற்சி யுடையோர்க்குப் பெரும்பாலும் ஸாக்ரடீஸ் என்பவரது சரித்திரம் தெரிந்திருக்கலாம். தமிழ் மாத்திரம் தெரிந்திருப்பவர்களுக்கும் பயன்படுமாறு அதனை இங்குச் சுருக்கமாகச் சொல்லவேண்டியது அவசியமாகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரத்து நானூறு வருடங்களுக்குமுன் கிரீஸ் தேசத்து ஏதன்ஸ் நகரில் ஸாக்ரடீஸ் கற்சிலைசெய்யும் ஓர் சிற்பிக்கு மகனாய்ப் பிறந்தார். அக்கால வழக்கத்திற்கிணங்க இளமையில் இவர் தேகப்பயிற்சியும் சங்கீதமும் பயின்றனர். பிறகு கணிதசாஸ்திரம் வானசாஸ்திரம் முதலியவைகளுங் கற்று அதன்மேல், கிரேக்கியப்புலவர்கள் தத்துவசாஸ்திரிகள் முதலாயவர் வரைந்துள நூல்களையும் ஓதிக்கொண்டனர். தன் தந்தையின் கற்சிலைச் சிற்பத்தொழிலை இவரும் சிறிது காலம் நடத்தி வந்தாராகிலும், அத்தொழிலை விட்டுவிட்டார். நீதிநெறி இன்னதென்று தான் போதிக்க வேண்டுமென்று, கனவிலும், குறிகளாலும் அசரீரியாகவும் தெய்வம் தன்னைத் தூண்டுகின்றதென்னுமோர் உணர்ச்சி அவருக்கு உண்டாயது. அதன்மேல், செல்வம் அதிகாரம் சுகவாழ்க்கை முதலியவைகளில் தனது நாட்டத்தைச் செலுத்தாமல், காலிற்குச் செருப்பும் அற்ற ஏழையாய், வெயிலிற்கும் மழைக்கும் உடுக்கும் உடை ஒன்றேயாய நிலையில், தெருவிலும் கடைகளிலும் மனையகத்திலும் தன்னுடைய போதனையைப் புகட்டும் வாழ்க்கையால் எழுபதாண்டு நிரம்பினர். தூய வாழ்க்கையர். பொய் புகன்றறியார். தெய்வபக்தி நிறைந்தவர். ஒருவருக்குந் தீது மறந்துஞ் செய்திரார். சலிக்காத பொறுமையுடையவர். பேரறிஞர் என்னும் அடைமொழி இவருக்கு வழங்கப்பட்டது.

ஆசிரியனாய்த் தன்னை அமைத்துக்கொண்டாரெனினும், புதிய தத்துவம் முறை கொள்கை யொன்றும் இவர் நிலைநாட்டவேனும் போதிக்கவேனும் முயன்றிலர். ஜனங்கள் தமது அறியாமையையே அறிவென்று கருதி இழைக்கின்ற பிழைகளை இடித்துக்கூறி அவைகளைத் தெளியவைத்து அதனால் அவர்களது புத்தியும் தருமநெறியும் உயர்வடையும்படி செய்வதே தனக்கேற்ற கருமமென்று கொண்டிருந்தனர். அக்காலத்தில் குடியரசாட்சிக் குட்பட்டிருந்த ஏதன்ஸ் நகரம் அரசியல் கட்சிகளால் அதிகம் பிய்ப்புண்டு கிடந்தது. குடியரசாயினும், செல்வாக்குடைய சில பெரியோர் கையிலேயே அதிகாரம் இருக்கவேண்டும் என்ற கட்சியினர் ஒரு புறமும், முற்றிலும் கலப்பற்ற பொதுஜனப் பிரதானமா யிருக்கவேண்டுமென்ற கட்சியினர் மறுபுறமும், இவர்களுக்கிடையே அதிற்சிறிது இதிற்சிறிது கலந்திருக்க வேண்டுமென்ற மிதவாதக்கட்சியினரும் மாறிமாறி அதிகாரம் பெறுவதும், அப்படி அவரவர் அதிகாரத்திற்கு வரும்போது தம் எதிர்க்கட்சித் தலைவர்களைப் பலவிதத்தில் வருத்தித் தொலைப்பதுமாய்க் கிடந்த அரசியல்தந்திரங்களில் ஸாக்ரடீஸ் கலவாமை ஆச்சரியமன்று. அரசியல்வாதங்களில் தான் கலவாததற்கு அவர் கூறுகின்ற காரணம் கருதத்தக்கது. "என் வாழ்நாள் முழுவதும் சோம்பித்திரிவதற்குரிய சாமர்த்தியத்தை நான் பாராட்ட இயலவில்லை. பணமென்றும் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவருவதென்றும், உத்தியோகங்களென்றும், சட்டசபைகளிற் பேசுவதென்றும், தந்திரங்களும், கட்சிச் சூழ்ச்சிகளும் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்திருந்தபோதிலும் அவைகளை நான் பொருட்படுத்தினவனல்லன். இவ்வழியில் பிழைப்பதற்கு என் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. ஆகையால் மற்றவர்க்கேனும் வாஸ்தவத்தில் எனக்கேயேனும் ஒருவித நன்மையும் அடைவதற்கு வகையற்ற அவ்வரசியல்விஷயங்களில் யான் சேராதொழிந்தேன். அதற்குப்பதிலாக இந்நகரத்தில் வசிப்பவன் ஒவ்வொருவனிடமுஞ் சென்று, 'ஐய உன்னையே நீ நன்றாகச் செய்துகொள்; பணம் அதிகாரம் முதலிய இலாபங்களை நாடுவதற்குமுன் தர்மமும் ஞானமும் தேடிக்கொள்,' என்று வற்புறுத்தலாயினேன்........அதுவுமன்றி யான் பொதுஜன வாழ்க்கையில் ஈடுபட்டிருந்து தர்மத்தையும் நியாயத்தையும் நடத்திவைப்பதே கருமமா யிருந்தேனாயின் என்னை இவ்வளவுகாலங்கூட உயிரோடு விட்டுவைப்பார்களா! நானாகிலும், வேறு யாவரேயாயினும் தர்மநியாயங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் ஒருவரும் பொதுஜன ஊடாட்டத்தில் நெடிதுநாள் நிலைத்திருக்க இயலாதென்பது திண்ணம்," என்று ஸாக்ரீடீஸ் சாற்றினர்.

ஆதலின் இவர் ஒவ்வொருவர் இடமாகச் சென்று, "உங்களைப்பற்றியும் உங்கள் ஆஸ்தியைப் பற்றியும் ஒருபோதும் நினையாதீர். உங்கள் ஆன்மா நற்கதி அடையு நெறி யொன்றே உங்கள் நோக்கமாகட்டும். செல்வமும் செல்வாக்கும் ஒருவனுக்கும் நற்குண நற்செயல்களை அளிக்கமாட்டா. மற்று, நற்குண நற்செயல்களுக்குரிய தருமசிந்தனைதான் செல்வமும் மற்றெல்லா நலங்களும் தனித்தனி மனிதருக்கேனும் பொதுஜனங்களுக்கேனும் நல்கக்கூடும்" என்று வற்புறுத்திவந்தார்.

ஏதன்ஸ் நகர வாலிபர்பலர் ஸாக்ரடீஸைப் பின்பற்றினர். வியாபார வர்த்தகங்களில் உழன்றிருந்த சில வாலிபர்களை இவர் அவைகளை விட்டுவிடும்படி செய்து தத்துவஅறிவு பெறுவதற்குரிய முயற்சியில் சேர்ப்பித்தார். இதனால் வர்த்தகச் செழிப்பிற்கு வாழ்க்கையை விற்றிருந்த தந்தைமார் இவரிடம் விரோதம் பாராட்ட நேர்ந்தது. அரசியல் வாதங்களில் தர்மநியாய நியதியுள்ளவர்களுக்கு இடமில்லையென்று விளம்பியதாலும் பலர் இவர்பால் பகைகொண்டனர். இதுவுமன்றி, அறிவாளிகள் என்று தம்மை எண்ணிக்கொண்டிருந்த, அரசியல் வாதிகள் புலவர்கள், வர்த்தகர், தொழிலாளிகள் முதலியவர்களுடன் வாதஞ்செய்து அவர்களது அறியாமையை மறுக்கமாட்டாவகையில் அவரவர்களுக்கு எடுத்துக்காட்டி வந்ததினால் இவருக்கு விரோதிகளானவர் பற்பலர். இப்படியே இவர் எழுபதாண்டு கழித்தனர். இவரைப்பாராட்டினவரும், பகைத்தவரும் பலர்; எனினும் இவரை இருதிறத்தோரும் வியந்தனர். இதற்கிடையில் இரண்டொருமுறை பொதுஜன விவகாரத்தில் தன்னுடைய கடமையைச் செலுத்தவேண்டி நேர்ந்தபோது, அப்பொதுஜன அபிப்பிராயத்திற்கெல்லாம் நேர் எதிராய்த் தன்னுயிர்க்கு உறுதி யெண்ணாது தருமநியாயங்களையே தனியே கடைபிடித்து நின்றார். ஆயினும் அவருக்கு அச்சமயம் தீங்கு நேரவில்லை. எனினும், கலப்பற்ற பொதுஜனப் பிரதானக் கட்சியினர் (The unmixed democratic party) அதிகாரத்திற்கு வந்தனர். பேரறிஞராகிய ஸாக்ரடீஸை நஞ்சென வெறுத்துப் பகைத்திருந்தவர்களில் பலர் இக்கட்சியைச் சேர்ந்தவர். இது இயற்கையாவதுமன்றி எக்காலத்து அநுபவமும் அவ்வகைத்தாதல் எளிதில் உணரற்பாலதே. இவர், ஊரார் ஏற்றுக்கொண்டுள தெய்வங்களை மறுத்துப் புதுப்புது தெய்வங்களைப் புகுத்தப் பார்க்கின்றாரென்றும், வாலிபர்களுக்குத் துர்ப்போதனைசெய்து அவர்கள் தம் தந்தையர்களுக்கு அடங்காதபடி கெடுத்துவிடுகின்றாரென்றும் இவர்மேல் இரண்டுகுற்றங்கள் ஏற்படுத்தி விசாரணைக்குக் கொண்டுவந்தனர். அவ்விசாரணையில், எழுபது வயது முதிர்ந்த ஸாக்ரடீஸ் தன்னுடைய கட்சியை எடுத்துவாதித்து இவ்விரண்டு குற்றங்களும் தன்னைச் சேராவென்று விளக்கினாரேனும் இறுதியில் நியாயாதிபதிகளால் இவர் குற்றவாளியென்றே கொள்ளப்பட்டு மரணதண்டனையும் விதிக்கப்பெற்றார். விசாரணைகாலத்திலேனும் சிறிது பணிவுடன் பேசியிருப்பாராயின் ஒருகால் அவர் விடுதலை யடைந்திருக்கலாம். ஆனாலோ, அங்கும் அவர் யாவருடைய அறியாமையையுமே அளந்து காட்டியதுமல்லாமல், ஆயிரந்தரம் தான் சாகவேண்டினும் அதுவன்றித் தான் செய்வதற்கு வேறு இல்லை என்றும் சாதித்தனர். தண்டனை நிறைவேறுவதற்கு இடையிருந்த நாளில் சிறையிலிருந்து இவர் தப்பிப்போவதற்கு இவரது நண்பர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து எவ்வளவு தூண்டினும் இவர் மறுத்துவிட்டார். மரணம் நேர்வதும் ஒருவன் நன்மைக்கோ தீமைக்கோ வென்று நிச்சயமாக அறியவல்லார் யார். ஆதலின் விதித்த தண்டனையை ஏற்றுக்கொள்வதே தக்கதுஎன்று துணிந்து கொலையாளிகள் நீட்டிய விஷத்தைச் சிறிதும் மனம் கலக்கமின்றி யருந்தினராய் மாய்ந்தார். (தொடரும்)



# அப்பர்

## 1. அவிநயக் கலை (Dancing, Dumb-show)

### iii. அவிநயத்தின் களன்கள்

25-வது பக்கத் தொடர்ச்சி.

அவிநயமென்பது சாந்திக்கூத்தில்ஒருவகையென்று முன்னரே கண்டோம். இக்கூத்தில், தலைக்கோலரிவை யாதொன்றும் பகராமல், தனது அவயவங்களின் இயக்கத்தால் யாவரும் விஷயம் முறைப்படி அறியக் கூத்து நடத்துவாள். இதனை அவிநயம்பிடித்தல் என்று உலகவழக்கிற் கூறுவார். நின்றபடியே அவிநயம் பிடித்துக் கூத்து நடத்தலாகும். அல்லது ஓரிடத்திலே நில்லாமல் அரங்கில் முன்னும்பின்னும் சுற்றுப்பக்கங்களிலும் உலவிக்கொண்டும் அவிநயம் பிடிப்பதுண்டு. இதன்றி உட்கார்ந்தும் படுத்துக்கொண்டும் அவிநயம்பிடித்தலும் மரபே; பிற்கூறிய விரண்டும் பொதுவியலில் நடத்துவபோல், வேத்தியலில் நடவா. செத்தோனவியனம் முதலியவற்றிற்குப் படுத்தே அவிநயம் காட்டப்படும். இவ்வாறு நடத்தும் நால்வகை முறையை, அவிநயக் களன்கள் நான்கென்பர் புலவர்:—

"நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென்
றத்தகு நான்கே அவிநயக் களனே"

பொய்யன்புடைய போலித் தொண்டர்களிடத்தும் அவிநயச் செய்கைகளைப் பெரும்பாலும் காணலாமென்பதைத் திருநாவுக்கரசுநாயனார் சில பாசுரங்களிற் குறிப்பா லுணர்த்துகின்றார்.

முள்குவார் போகம்வேண்டின் முயற்றியா விடர்கள்வந்தால்
எள்குவா ரெள்கிநின்றங் கிதுவொரு மாயமென்பார்
பள்குவார் பத்தராகிப் பாடியு மாடிநின்றும்
உள்குவா ருள்ளத்துள்ளா ரொற்றியூ ருடையகோவே!

திருவொற்றியூர், திருநேரிசை 9.

ஜடபதார்த்தங்களும் அவிநயம் செய்வதாய் உருவகமாக அப்பர் தேவாரத்தில் சிற்சில தொடர்மொழிகளைக் காணலாகும்! வாகீசர் இக்கலையிற் சிறந்து விளங்கியதால் அவரறியாமலே இதன் ரசங்கள் இவர் கவிகளில் ஆங்காங்குப் பாய்ந்தோடுகின்றன:—

அங்கைக்கடக்கைக்கு முல்லைப்புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி யூரர் திருமுடியே.

திருவொற்றியூர் - திருவிருத்தம் 9.

உருவகமாக அவிநயக் கலையை விளக்குதல் மாத்திரமன்று; அப்பர் தேவாரத்தில், தலைக்கோலரிவையை அவிநயம் செய்விக்கும் சிறு கட்டுரைகள் ஒழுங்காயும், சுவலபமாயும் நடித்து அவிநயக்களத்தில் காட்டக்கூடிய கருத்துக்கள் அமைந்த பதிகங்கள் பலவுள. அவற்றிற் சில நோக்குவோம்:—

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணாது
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடையகோவே.

திருவொற்றியூர் - திருநேரிசை 2.

வேறு கருத்துக்களமைந்த பாடல்களுமாங்காங்குக் காணலாகும். ஆயினும் ஓரே கருத்தின்றி அடியிற் காணும் பதிகம்போல் இரண்டு மூன்று கருத்துக்கள் தொடரப்பெறின் அவிநயம் பிடித்துக் காட்டுவது சற்றுக் கடினமே:— [துக்
ஓம்பினேன் கூட்டை வாளா வுள்ளத்தோர் கொடுமைவைத்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக் கொள்ளா யொற்றியூ ருடைய கோவே!

திருவொற்றியூர் - திருநேரிசை 1.

ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக்காப்புச் செய்யுளும் இராவணனுக் கருள்செய்தமை அவிநயத்திற்கு அப்பியாச பாடங்களாய்க் கொள்ளலாகும். ஒரு கருத்தாயினும் அவிநயம் பிடிப்பதற்குக் கடினமான செய்யுட்களும் உள. (உ-ம்)

[நின்று
துருத்தியாங் குரம்பை தன்னிற் றொண்ணூற்றங் கறுவர்
விருத்திதான் றருக வென்று வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு வந்தவந் தடைய நின்ற
அருத்தியார்க் கன்பர்போலு மதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை-4.

### (iv) எழுவகை நிலம்

"எழுவகை நிலமாவன ச ரி க ம ப த நி என்னும் எழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரன் முதலாகிய ஏழும்" என்பர் அடியார்க்குநல்லார். ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்குதிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி என்பன எய்தும் நிலங்கள் என்பர் சிலபுலவர். இக்கருத்தின் சார்பாய்த் தேவாரத்திலும்,

வரிமுரி பாடியென்றும் வல்லவா றடைந்து நெஞ்சே
சுரியுரி மூடவல்ல கடவுளைக் காலத் தாலே
சுரிபுரி விரிகுழலா ளுடியிடைப் பரவை யல்குல்
அரிவையோர் பாகர்போலு மதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகை வீரட்டானம்-திருநேரிசை-6.

அப்பர் எழுவகை வரிகளையுட் எண்ணினர் போலும்.

"குரன் முதலிய ஏழு" என்பன ஏழிசை யெனினும், ஏழு நரம்பு எனினும் பொருந்தும். "மென்மையிற் கிடந்த குரலின் பாகமும்" என்றாழி, (நரம்பு, அதாவது) யாழின்மே னிற்கின்ற நரம்புகளாம். இவற்றால் எழுவகை யிசையும் பிறக்கும்.

ஏழுகொ லாமவ ரூழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட விருங்கடல்
ஏழுகொ லாமவ ராளு முலகங்கள்
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே

விடந்தீர்த்த திருப்பதிகம் 7.

இவ் வெழுநரம்புகள் யாழில் அமையுமுறை ஆய்ச்சியர் குரவையில் எடுத்துக் காட்டில், மாதரி தன்மகள் ஐயைவை நோக்கி இம்மகளிரைப் பழைய நரம்புகள் நிற்கு முறைமையிலே நிறுத்திப் பெயரிடுவதைக் காண்க:—

இடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்
குடமுத லிடமுறை யாக்குரல், துத்தங்
கைக்கிளை, யுழை, யிளி, விளரி, தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே.

சிலப்பதிகாரம்.

இந்நரம்புகளின் மாத்திரைகள் வருமாறு: —

குரல்துத்த நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு—விரையா
விளரியெனின்மூன் றிரண்டு தாரமெனச்சொன்னார்
களரிசேர் கண்ணுற்ற வர்.

இவற்றுள் தாரத்து உழை பிறக்கும்; உழையிற் குரல் பிறக்கும்; குரலுள் இளிபிறக்கும்; இளியுள் துத்தம் பிறக்கும்; துத்தத்துள் விளரி பிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்கும். இவற்றுள் முதலிற் றோன்றிய நரம்பு தாரமெனப்படும். இவற்றின் விவரம் ஆய்ச்சியர் குரவையின் அடியார்க்குநல்லா ருரையிற் காண்க.

இந்நரம்பில் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்குமாத்திரை பெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்றுமாத்திரையும், உழையும் தாரமும் இரண்டுமாத்திரையும் பெறும்.

பண்டளவு நரம்போசைப் பயனைப் பாலை
படுபயனைக் கடுவெளியைக் கனலைக் காற்றைக்
கண்டளவிற் களிகூர்வார்க் கெளியான் றன்னைக்
காரணனை நாரணனைக் கமலத் தோனை
எண்டளவி லென்னெஞ்சத் துள்ளே நின்ற
வெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணும்
தண்டரனைத் தலையாலங் காடன் றன்னைச்
சாராதே சாலநாட் போக்கி னேனே.

திருத்தலையாலங்காடு - திருத்தாண்டகம்-9.

இளிபடுமின் சொலினார்க
ளிருங்குழன்மே லசைந்தேறத்
தெளிபடுகொள் கைகலந்த
தீத்தொழிலார் கடம்பூரில்
ஒளிதருவெண் பிறைசூடி
யெண்ணுதலோ டுடனாகிப்
புலியதளாடை புனைந்தான்
பொற்கழல் போற்றுதுநாமே.

சம்பந்தர்.

இவ்வெழுவகைநிலத்தில் மத்தியமாயது அதாவது, மிகத் தாழ்ந்துமிராமல் உயர்த்தியுமிராம லிருக்கும் நடுத்தரம் (Medium) இசையை இளி எழுப்புவதால் சம்பந்தர் " இளிபடு மின்சொலினார் " எனத் திருவாய் மலர்ந்தார். தலைக்கோலரிவை அவிநயம்நடத்தும்போது நால்வகைக் களத்தினும், இவ்வெழுவகை நிலங்கள் விளக்கும் சைகைகள் செய்து முடித்தபின்னர் அதற்கேற்ப வாத்தியங்கள், குழல், யாழ் முதலியன வாசிக்கப்படும். கலைஞானங்களில் ஒன்றாய் எடுத்துள நாடகக் கலையிற் சிறந்தபாகமானது அவிநயமாதலாலே அக்கலைக்காக இங்கு அவிநயத்தை விளக்கலாயினோம். அக்கலைக்குச் சம்பந்தமானவை நிருத்தம் (Dancing) சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம் தாளமென்பன. இவ் வாறு கலைகளையும், இனி அப்பர் எவ்வாறு தேவாரத்தி லுணர்த்துகின்றன ரென்பது ஆராய்வோம்.

மாந்தர்தம் பானறுநெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர்வீணை
முதிரிவோர் வாய்மூரிபாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வ தோவிவர் சார்வே!

சம்பந்தர்.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

### நடத்தை [Behaviour]

நடத்தையின் இயல்பையும் அந்நடத்தை நிகழ்கையில் காணக்கிடக்கும் நரம்பி னமைப்பையும் கண்டோம். இதனால் பெறப்படுவதென்னை? நோக்கமுடைய செயல்கள் முன்னுணர்ச்சியுடையன, முன் காட்சியுடையன என்பது ஆயிற்று.

26 வது பக்கத் தொடர்ச்சி.

நோக்கமுடைமையே உள்ளச்செயலின் சிறப்புஇயல்பாம். மேல் காட்டிய ஐந்தியல்புகளும் உள்ள இடத்திலெல்லாம் நோக்கம் உண்டு, மனம் உண்டு என்று உறுதி கூறல்வேண்டும். விலங்குகளின் செயல்களும் இவ்வைந்தியல்புகளோடு விளங்கினால் நோக்கமுடையனவேயாம். நோக்கம் என்பதற்குச் செயலின் முன்னுணர்ச்சி எனப் பொருள்கொள்ளாது, உயிருளியின் நன்மையையும் அதனினத்தின் நன்மையையுமே நோக்கமாக உடையன என்று பொருள்கொள்வர் ஒரு சிலர். செயல்கள் அனைத்தும் மடக்குச் செயல்களே என்றும் கூறுவர். உயரிய மக்களிடத்தே முன்னுணர்ச்சி காணக்கிடக்கிறதே என்றால், அது இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமற்போனாலும் ஒன்றுதான், என்பர். ஆனால், மடக்குச்செயல்கள் முன்னர், நாம் கண்டபடி, மூளையில்லாதபோதும் எழுந்து விளங்குகின்றன. ஆகவே அகநிலையைப் புறக்கணித்தல்வேண்டும் என மன்றாடுவார். இவர்கள் உயிரில்லாத பொருள்களிடத்தே இவ்வைந்தியல்புகளையும் காட்டுவார்களானால் அகநிலையைப் புறக்கணிக்க ஒருப்படலாம். அதுவரையில், உள்ளம் அகநிலையைப் பற்றியது என்று கொண்டு, நோக்கம் முன்னுணர்ச்சி என்று பேசிப் போகவேண்டும். கருவிப் பொறிகள் (யந்திரங்கள்) செய்யும் செயல்கள் நோக்கமுடையன அன்றோ? அச்சடிக்கும் பொறியைப் பாருங்கள். ஏட்டைத் தானே எடுக்கின்றது; எழுத்துக்களினடியில் விடுகின்றது, எழுத்துக்களின்மேல் மையைப் பூசுகின்றது, ஏட்டை அழுத்துகின்றது, பின்னர் வெளியே தள்ளுகின்றது. ஆனால், இச்செயல்களின் நோக்கம் அச்சடிக்கும் பொறியின் நோக்கம் அன்று. அதனை இயற்றிய கருமானின் நோக்கமாகும்; அதனை இயக்கும் வேலையாளின் நோக்கமாகும். எனவே நோக்கமுடைய செய்கையையே உள்ளத்தியற்கை நூலறிஞர் ஆராய்கின்றனர்.

மடக்குச்செயல்களே இல்லை என்பதல்ல. அவை நடத்தையினும் வேறு என்றுதான் இங்குக் கூறுகின்



றோம். மூளையில்லாத தவளையின் இயல்பை முன்னரே கண்டோம். அது செய்வனவெல்லாம் மடக்குச் செயல்களேயாம்; நடத்தையின் ஐந்தியல்புகளும் அம்மடக்குச் செயல்களில் காணக்கிடைக்கவில்லை. மூளையில்லாத தவளை விழுந்தால் விழுந்தபடியே இருக்கிறது. யாதேனும் ஒரு தூண்டுகோல் இருந்தால்தான் துலங்கித் தொழில்புரிகிறது. எனவே தன்னியக்கம் என்பது அங்கு இல்லை என்பதாயிற்று. தூண்டுகோல்எத்தனைநேரம்இருக்கிறதோ அத்தனை நேரமே தொழில் புரிகின்றது அந்த மூளையில்லாத தவளை. எனவேநடத்தையின்தொடர்ச்சியும்காணோம்; ஒருமுறை செய்தபடியே பலநூறு முறையும் வேறுபாடு சிறிதுமின்றித் தொழில்புரிந்து போவதனையும் கண்டோம். எனவே நடத்தையின் வேறுபாடும் அங்கில்லை என்க. நோக்கமுடையதாய் அந்நோக்கம் கைவரப்பெற்றால்தான் முடிவடைவது நடத்தையின் இயல்பெனக் கண்டோம். இவ்வியல்பும் மடக்குச்செயல்களில் இல்லை. தூண்டுதல் நீங்கியதும் செயல் முடிவடைதல் மடக்குச்செயல்களில் காணப்படுகிறதெனச் சிலர் எடுத்துக்காட்டுவர். தூண்டுதலின் நீக்கமொன்றே நடத்தையின் முடிபன்று. ஒரு புதிய நிலையின் ஆக்கம் காணப்படுதல்வேண்டும். மூளையில்லாத நாயின்மேல் வெயில் உறைக்கின்றது. அதனைப் பொறுக்கமாட்டாமல் நடக்கத் தொடங்குகின்றது. அவ்வளவே மடக்குச்செயல் செய்யலாவது. ஆனால் மூளையுள்ள நாயோ, நிழலுள்ள இடத்தை நாடிச் சென்று, ஒரு புதிய நிலையை உண்டாக்கிக்கொண்டு அங்குப் படுத்துறங்குகிறது. புதிய நிலையை எதிர்பார்த்து முன்னேற்பாடாக இருக்கும் நிலையும் மடக்குச் செயலில் காணக் கிடைக்கவில்லை. நாயானது வெறும் மடக்குச்செயல்களின் கூட்டமேயானால், தனது தலைவனது ஒலிகேட்டு எழும், உலாவும். அதனால் அது, வாலைக்குழைத்துக் கதவைத் திறக்க முயன்று கூத்தாடித் தலைவனை எதிர்பார்க்க முடியுமா? முடியாதன்றோ? மடக்குச்செயல்கள் பயிற்சியால் திருத்த முறுவதில்லை என்பதனையும், மூளையில்லாத தவளையைப்பற்றி ஆராய்ந்தபோது கண்டறிந்தோம்.

மூளையில்லாத தவளையின் காலில் புளிப்புப் பூசப்பட்டபோது, ஒரு காலால் அதனை நீக்கமுயல்கின்றதென்றும், அக்காலையும் இறுகப் பிடித்துக்கொண்டால் மற்றொரு காலால் நீக்க முயல்கின்றது என்றும் கண்டோம். ஈதும் நடத்தையன்றோ? அவ்வாறாயின் மடக்குச்செயலிலும் நடத்தையின் இயல்புகள் காணப்படவில்லையா? இதனை, மடக்குச்செயல் என்னாது நடத்தை என்றே கூறலாம். ஆனால் மூளையில்லாத இடத்தும் நடத்தை எழுமோ, என்ற கேள்வி பிறக்கும். கீழ்நிலையில் உள்ள உயிருளிகளிடம் மூளையானது நம்மிடத்தில் இருப்பதுபோல முற்றி வளர்ந்திருக்கக்காணோம். ஆகையால் அந்நிலையில் உள்ளவைகளிடத்தில் மூளையில்லாமலும் நடத்தை விளங்கும் என்று கூறலாம். அல்லது ஈதும் மடக்குச்செயலே என்றும் கூறலாம். ஒரு கால்வழியாக ஓடிய கிளர்ச்சி, தடுக்கப்பட்டபோது மற்றொரு கால்வழியாகப் பரவுகிறது என்றும் விளக்கிவைக்கலாம் அன்றோ?

மடக்குச்செயல்களையும் (Reflex action) நடத்தையையும் இவ்வாறு உடன்வைத்து ஆராயும்போது மற்றொரு வேற்றுமையும் புலனாகின்றது. மடக்குச் செயலோ உயிருளியின் ஒருசில உறுப்பின் எதிரூன்றலாம். முழங்காலிலுள்ள தசைநாரில் தட்டினால் காலடியை முன்னுக்கு உந்துகிறோம். கண்ணெதிரில் வேறொரு பொருள் வந்தால் என்னையும் அறியாமல் கண்ணிமையை மூடுகின்றேன். ஆனால் நடத்தையோ உயிருளி முழுதும் எதிரூன்றுவதாகும். 'என்னையுமறியாமல் செய்தேன்' என்பது அந்நிலையில் பேசும் பேச்சன்று. ஒரு நாய் படுத்துக் கிடக்கிறது; அதனை அங்கும் இங்கும் மெல்லத் தட்டுகின்றேன். அஃது அரைத்தூக்கத்தில் இருந்துகொண்டு, அங்கங்கே படுகின்றவற்றைத் தேய்த்துத் தள்ளுகிறது. அந்நாயும் அறியாதபடி அதன் உறுப்புக்கள் இயங்குகின்றன. அதே மடக்குச்செயல்களாம். ஆனால், ஏதேனும் ஒலி கேட்டால் விழித்தெழுந்து ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பதுபோல உடலை முறுக்கிநிற்கின்றது. அயலான் ஒருவன் வந்தால் மேலே பாய்கிறது. உடலை முறுக்கி நிற்கும்போதும், மேலே பாயும்போதும், உயிருளி முழுதும் எதிரூன்றுகிறது. அச்செயல்கள் தனித்தனி உறுப்புக்களின் செயல்களாகாது, உயிருளியின் செயல்களாக விளங்குகின்றன. ஈயை ஒட்டியும், கைப்பட்டால் அதைத் தள்ளியும் அரைத்தூக்கத்தில் நின்றபோது, நாயின் சில உறுப்புக்களே எதிரூன்றி நின்றன. அயலான் வந்தபோது அந்நாய் தன் ஆற்றல் முழுதினையும் ஒருமுகப்படுத்துகின்றது. ஈதே நடத்தையின் ஏழாவது சிறப்பியல்பாம்.

நடத்தை என்பது நரம்பமைப்பு நன்கு வளரப்பெறாத உயிர்களிடத்தும் காணக் கிடக்கின்றது. ஆனால் மடக்குச்செயல்களோ நன்குவளர்ந்து முற்றிய நரம்பமைப்புள்ள இடத்தில்தான் காணப்படுகின்றன. ஆகையால் நடத்தைக்கொள்கையினர் (Behaviourists) நரம்பமைப்பு முற்றாத இடங்களில் காணப்படும் நடத்தைகளுக்கு வேறொருவகையில்வழி சொல்லுதல் வேண்டும். அங்கும் நோக்கமுண்மையை நாம் உடன்படுவதால் வேறொரு விளக்கம் நாம் கூறவேண்டுவதில்லை. நடத்தைக் கொள்கையினர் உயிருளி முழுதும் ஒரு பொறியே (யந்திரம்) என்பவர். ஆதலின் அவர்களைப் பொறிக்கொள்கையினர்என்றும் கூறலாம். அவர்கள் கொள்கைகளை ஆராய்வதாலேயே நமது நோக்கக்கொள்கை வலியுறும்.

நரம்பமைப்பு நன்கு வளராதபோது திருப்பம் (Tropism) என்ற ஒன்றை உடன்பட்டு அவ்விடத்துச் செய்கைகளை விளக்குகின்றனர். ஒளி, ஒலி, மின், இயற்கையமைப்புப்பொருள்கள் முதலியவற்றைக்கண்டால் உயிருளிகள் அவற்றின் முன்னாகவோ பின்னாகவோ திரும்பும் ஒரு புதிய ஆற்றலை யுடையனவாக இருக்கின்றன என்று கூறுகின்றனர். இருபாலும் ஒத்தனவாய் இயைந்த உடலமைப்புள்ள உயிருளி ஒன்று இரண்டு துடுப்புப்போன்ற செதிள்களால் நீரில் நீந்திச் செல்கிறது. நிறமுணரும் இரண்டு புள்ளிகள் இரண்டு கண்களாக விளங்குகின்றன. வலக்கண் நரம்பு வலச்செதிலிலுள்ள தசைநாரோடும் தொடர்புபட்டுக் கிடக்கின்றது. எந்தப்புறம் இருக்கும் கண்ணில் ஒளி மிகுதியாக விழுகிறதோ அந்தப்புறம் உள்ள தசைநார் விரைவாக இயங்குகிறது. இடக்கண்மேல் ஒளிவிழுந்தால் இடச்செதிளியங்குகிறது. அவ்வுயிருளி வலதுபுறமாகத் திரும்புகிறது. பின்னர்க் கண்மேல் ஒளிவிழாதன்றோ?

ஒளிவிழாதபோது செதிளும் அசைவதில்லை. எனவே இவ்வுயிருளி ஒளிப்பின் திருப்பமுடையது என்க.

மேற்சொல்லியபடியுள்ள மற்றொரு உயிருளியைக் காண்போம். இப்புதிய உயிருளியினிடம், வலக்கண் நரம்பு வலச் செதிளிலுள்ள தசைநாரோடு இணைந்திராது இடச்செதிளிலுள்ள தசைநாரோடு இயைந்திருக்கிறது. அவ்வாறே இடக்கண் நரம்பும் வலச் செதிளிலுள்ள தசைநாரோடு இணைந்திருக்கிறது. இவ்வுயிருளியின் இடதுகண்மேல் பழையபடி ஒளி விழுகிறது. இடக்கண்ணோடு இணைந்திருக்கும் வலச் செதிள் இயங்குகிறது. அதனால் அவ்வுயிருளி இடது புறமாகத் திரும்புகிறது. அதாவது ஒளியின் முன்புறமாகத் திரும்புகிறது என்க. எனவே இவ்வுயிர் ஒளி முன் திருப்பமுடையன (Positively Photo-tropic.)

இவ்வாறே நரம்பமைப்பு நன்கு வளரப்பெறாத உயிருளியின் செயல்களை அப் பொறிக்கொள்கையினர் விளக்கிவைக்கின்றனர். சில பூச்சிகளின் புழுக்கள் தாங்கள் முட்டையாக இடப்பட்ட மரத்தின் மேலே ஏறுகின்றன. அங்கே நுனியில் இருக்கும் மொக்குகளைத் தின்கின்றன. கதிரவனுக்கு முன்பாகச் செல்லும் ஆற்றலுடையனவாம் இப்புழுக்கள். அதாவது கதிர்முன் திருப்பமுடையனவாம் (Positively Helio-tropic) மரத்தில் உள்ள இலைகளை எல்லாம் தின்றபின்னர் மேலும் உணவு வேண்டிக் கீழ் இறங்குகின்றன. இலைகளையுண்டு முடிந்ததும் ஏதோ ஒரு வகையால் தமக்குமுன்னிருந்த கதிர்முன் திருப்பமெனும் ஆற்றலை இழந்துவிடுகின்றன. கதிரவனுக்கு முன்னாகத் திரும்புவதைவிட்டுக் கதிரவனுக்குப் பின்னாகத் திரும்புகின்றன. அதாவது கதிர்பின் திருப்பமுடையனவாகின்றனவாம். நடத்தைக் கொள்கையினரின் உயரியநிலை ஈதேயாகும். உணவின்மேல் நாட்டமாக உணவே நோக்கமாகக் கொண்ட உயிருளிகளின் செயல்கள் இவை எனக் கொள்ளாது மரத்தின்மேல் ஏறுவதற்கு ஒரு கொள்கையையும் கீழ் இறங்குவதற்கு மற்றொரு கொள்கையையும் விளக்கிக்கொண்டே இருளில் இடர்ப்படுவதால் என்ன பயன். இவை எல்லாம் அழகிய கதையும் அருமையான கனவுமே என்க. இந்தக் கொள்கையைப் பின்பற்றிய ஒரு கடவுள், விண்மீன்களில் ஒன்றில் வீற்றிருந்து கீழ் நம்மை நோக்கினால் இவர்கள் காண்பதிலும் சிறந்தவொரு கடவுட் காட்சி காண்பான். மக்களது செயலனைத்தும் திருப்பம் என்னும் ஆற்றலின் பயனே என்பான். நாள்எல்லாம் உழைத்துக் களைத்து மக்கள் கதிரவனது ஒளியின் பின்னாகத் திரும்பி இருட்டில் நுழைகின்றனர் எனக் காண்பான். ஆதலின் மக்கள் கதிர்பின் திருப்பமுடையார் என முடிவுகட்டுவான். காலையில் எழுந்திருந்து வெயிலில் உலாவுவது கண்டு, இம்மக்கள் எவ்வகையாலோ கதிர்பின் திருப்பத்தை இழந்து கதிர்முன் திருப்பமுடையவராய்க் கதிரவன் எதிரே போகின்றனர் என முடிவுகட்டுவான். குளிர்காலத்தில் மக்கள் நெருப்பைச் சுற்றிக் குந்தியிருப்பது கண்டு, அவர்கள் தீமுன் திருப்பமுடையவர்கள் என்ற முடிவிற்கு வருவான். அகநிலையைப் பொருட்படுத்தாது புறநிலை ஒன்றையேகொண்டு உயிருளிகளின் செயல்களை ஆராய்ந்தால் இவ்வாறுதான் இடர்ப்படவேண்டி வரும். நடத்தைக் கொள்கையினரின் திருப்பக் கொள்கை உண்மையானால் விண்மீனிலிருந்து கண்ட இக்காட்சியும் கடவுட் காட்சியாதல் வேண்டும். ஆனால் உலகத்தினர் இகழ்வர்.

நரம்பமைப்பானது பல நிலையிலுள்ள உயிருளிகளிடத்தும் ஏறக்குறைய ஒரே வகையாக அமைந்திருப்பதை முன்னரே கண்டோம். அவ்வாராய்ச்சி மக்களின் நரம்பமைப்பை நன்கு அறிவதற்குப் பெரிதும் பயன்பட்டதன்றோ! அங்ஙனமே நடத்தையையும் பல நிலையிலுள்ள உயிருளிகளிடம் எவ்வாறு விளங்குகிறது எனக் காணுதல் பயனுடையதாம்.

# தமிழ்ப் பாடம் 105.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

### கிருஷ்ணன் தூதச் சருக்கம்.

[31-வது பக்கத் தொடர்ச்சி]

**பா**ஞ்சால மன்னன் வகுத்த சுயம்வரத்தில் அருச்சுனன் யந்திரத்தை எய்தறுத்துத் திரௌபதியைக் கொண்டுவரப் பாண்டவர்கள் ஐவரும் தாய் சொற்கிணங்கி அவ்வொருத்தியை மணந்தனர். பிறகு திருதராட்டிரன் குருநாட்டை இரண்டாகப்பிரித்துத் தர, துரியோதனன் அத்திநபுரியிலும், தருமன் இந்திரப்பிரத்தத்திலுமிருந்து தனித்தனி அரசு புரிந்தனர். அப்போது தருமபுத்திரன் தனது தம்பியரைக் கொண்டு திக்குவிஜயஞ் செய்து இராசசூயயாகம் முடித்த பெருமையைக்கண்டு பொறாமை அடைந்த துரியோதனன் பாண்டவரைச் சூதிற்கழைத்துத் தன் மாமன் சகுனியின் வஞ்சனையால் அவர்களது செல்வமும் அரசுங் கவர்ந்துகொண்டு அவர்களையும் அவரது மனைவி பாஞ்சாலியையும் அடிமையாக்கியதுமல்லாமல், அரச சபையில் அவளைப் பற்றியிழுத்துவந்து துகிலுரியச் செய்தான். கண்ணபிரானது அருளால் ஆடை மேன்மேல் வளர்ந்து அவள் மானம் காக்கப் பெற்றது கண்ட திருதராட்டிரன், அவளது கற்பிற் கஞ்சி, பாண்டவர்களை அடிமையினின்று நீக்கிச் செல்வத்தையுங் கொடுத்தனுப்ப விரும்பினானாலும் துரியோதனன் அதனை மறுத்துவிட, யாவருங் கலந்து ஆலோசித்துப் பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷ அக்ஞாதவாசமும் செய்து மீள்வாராயின் அவர்களது நாட்டையும் மற்றுள உரிமைகளையும் திருப்பிக் . கொடுத்துவிட வேண்டுமெனத் தீர்மானஞ் செய்தனர். இதற்குத் தருமனும் ஒவ்வினான்; துரியோதனனும் ஒவ்வினான்; அப்பொழுது திரௌபதி, "நாம் அடிமைகளாகவே சென்று காட்டில் திரிவதால் என்ன பயன். இன்னொருதரம் சூதாடி நம்முடைய உரிமையையேனும் இப்பொழுதே வென்று பெற்றால் நலம்" என்று உரைக்க அதற்கிணங்கித் தருமராசன் தான் செய்த புண்ணியத்தையெல்லாம் பணயம்வைத்து மறு



சூதாடியதில் சகுனி தோற்கப் பாண்டவர்கள் அடிமை நீங்கினாரேனும் தம் கடவநாளைக் கழிக்கக் கானகஞ் சென்றனர்.

அடவியிலுறைந்த பாண்டவர் மீளாதவாறு அவர்களைப் பற்பல விதங்களில் கொன்று தீர்ப்பதெனத் துரியோதனன் செய்த சூழ்ச்சிகளினின்றும் இவர் கண்ணனருளால் தப்பிப் பதின்மூன்றுமாண்டு விராடநகர் அடைந்து மாறுவேடம் பூண்டிருக்க அங்குப் படையெடுத்துவந்த துரியோதனனைப் பொருதுதோற்பித்தனர். இறுதியில் பாண்டவர் வேடம் நீங்கித் தம்மைதெரிவித்துக் கொள்ளவும் விராடமன்னன் மிக மகிழ்ந்து தன் மகள் உத்தரையை, அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்திருந்த மகன் அபிமந்யு என்பானுக்கு மணஞ் செய்வித்து உபப்பிலாவியம் என்னும் பட்டணத்தைப் பாண்டவர்க்கு அமைத்துத் தந்தான்.

இனி, முன்னுரைத்த வாக்கின்படி தமது நாட்டைக்கேட்க உலூக முனிவனைப் பாண்டவர் துரியோதனிடம் அனுப்பினர். அவன் மறுக்கவே இவர் போருக்கு ஆயத்தமாகக் கிருஷ்ணனும் இவர்களுக்குத் துணையாய் வந்து சேர்ந்தான். அச்சமயத்தில், திருதராட்டிரன் தனது நண்பனாகிய சஞ்சய முனிவனைப் பாண்டவர்களிடம் அனுப்பிப் பாண்டவர்கள் அரசிற்கு ஆசைப்படுவது அழகு அன்று என்றும், தவம் முதலியன செய்து மறுமையின்பத்தை நாடுவதே அவர்களுக்குத் தக்கதென்றும் இதுபோன்ற பல நீதிகளைச் சொல்வித்துப் போர்புரியாது ஒழியும்படி முயன்றதற் கிவர் இணங்கவில்லை.

பாரதக் கதையில் இந்த இடத்திலிருந்து கிருஷ்ணனைத் தூதனுப்பும் இப்பாகம் தொடர்கின்றது.

ஞானமன்பொ டினிதுரைத்து ஞானமுனி
யகன்றதற்பின் சாம பேத
தானதண்ட மெனநிருபர் தருமமுறை
மையிற்புகலுந் தகுதி நோக்கித்
தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடு
வதற்கெண்ணிச் சுனைக டோறு
மேனலந்தண் கிரிப்பெருந்தே னிறைக்குமெழிற்
குருநாட னியம்பு வானே. (1)

### பதவுரை.

ஞானம் - மெய்யறிவுடைய, முனி - சஞ்சயமுனிவன், அன்பொடு - அன்பினால். ஞானம் - தத்துவங்களை, இனிது - இனிமையாக, உரைத்து - தருமனுக்குச் சொல்லி, அகன்றதன்பின் - போனபிறகு—

கிரி - மலைகள், ஏனல் - தினைப்பயிரிலிருந்து பாய்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, பெரும் - மிகுந்த, தேன் - தேனை, சுனைகள்தோறும் - சுனைகளிலெல்லாம், நிறைக்கும் - நிறைக்கின்ற, எழில் - அழகு வாய்ந்த, குருநாடன் - குருநாட்டரசனாகிய தருமபுத்திரன்—

நிருபர் - அரசர்களுக்குரிய, தருமமுறைமையில் - தருமவிதிகளில், சாமம் பேதம் தானம் தண்டம்என - சாமம் பேதம் தானம் தண்டம் என்று, புகலும் - வரிசையாகக் கூறப்பட்டிருக்கிற, தகுதி - தகுதியை, நோக்கி - உத்தேசித்து,—

தூ - பரிசுத்தமான, நறும் - வாசனை பொருந்திய, தண் - குளிர்ச்சியுடைய, துளவோனை - துளசிமாலையணிந்த கிருஷ்ணனை, தூது - துரியோதனனிடத்தில் தூதனாக, விடுவதற்கு-அனுப்புவதற்கு, எண்ணி - நினைத்து, இயம்புவான் - (பின்வரும் வாசகங்களை) சொல்லலானான்.

**விரிவுரை:**—பகைவரைத் தன்வழிப்படுத்துவதற்கு இராஜதர்மத்தில் நான்கு வித உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில், சாமம் என்பது நல்ல வார்த்தைகளால் சிநேகமாக முயல்கின்ற முறை. அதற்குப் பகைவன் உடன்படானாயின் பின் பேதம் கையாளப்படும். பேதம் என்பது, சிறிது சினந்து பயமுறுத்துவதும், தன் எதிரியினுடைய பகைவனால் அவனுக்குப் பயமுண்டாகும்படி செய்வதும், அவனுடன் நட்பாயிருப்பவர்களைப் பிரித்து விடுவதுமாம். பேதமும் பயன்படவில்லையெனின், வழக்கிலிருக்கும் பொருளில் ஒருபாகம் விட்டுக்கொடுத்து 'ராஜி' செய்து கொள்வதாகும்; இதனைத் தானம் என்பர். தானத்துக்கும் இணங்கானாயின் இறுதியில் தண்டுகொண்டு போர்செய்து அவனை அடக்குவதே முறை. தருமராஜன் சாம உபாயத்தை முதலில் கையாள்வதே தகுதியென்று நினைத்து, உலூக முனிவனை ஒருதரம் தூதனுப்பியது போதாமல் கண்ணனை மீண்டும் அனுப்பக் கருதினான்.

இப்பொழுது நாடொன்றும் தருமனுக்கு இல்லையாயினும், இனிக் குருநாடு முழுவதும் அவன் ஆள்வதற்கு இருக்கின்றானாகையால் கவி, வருவது நோக்கி இப்பொழுதே அவனை எழிற் குருநாடன் என்றழைக்கின்றார்.

### இலக்கணம்.

**III. A.** நிலைமொழி அ இ உ என்னும் சுட்டிடைச் சொற்களின் ஒன்றாகவேனும், எ, என்னும் வினா இடைச்சொல்லாகவேனும் இருக்க, வருமொழி முதலில் மெய்வருதல்:—

i. வருமொழி முதலில் யகரம் தவிர வேறு எந்த மெய் வந்தாலும் அந்தமெய், நிலைமொழியாகிய அ இ உ எ என்னும் நான்கு இடைச்சொற்களோடு புணரும்போது இடையில் இரட்டும் :—

அ + காடு = அ + க் + காடு = அக்காடு
இ + சேனை = இ + ச் + சேனை = இச்சேனை
உ + மரம் = உ + ம் + மரம் = உம்மரம்
எ + ஙனம் = எ + ங் + ஙனம் = எங்ஙனம்
அ + வளை = அ + வ் + வளை = அவ்வளை
இ + நாள் = இ + ந் + நாள் = இந்நாள்
உ + வேந்தன் = உ + வ் + வேந்தன் = உவ்வேந்தன்

இந்த உதாரணங்களில், வருமொழி முதலில் எந்த மெய் வந்திருக்கின்றதோ, அந்த மெய்யே இடையில் இரட்டக் காண்கின்றோம்.

இங்கு, அ, இ, உ என்பன ஒன்றைச் சுட்டிக்காட்டவும், எ என்பது ஒன்றை வினவவும் பொருள்படும்படி மற்றச் சொற்களோடு சேர்ந்து வருவதால், இவைகளை இங்கு இடைச்சொல் என்கின்றோம். (1-வது வால்யூம், 369-வது பக்கம்) ஆனால், அ இ உ எ என்பன சுட்டுப் பொருளிலும், வினாப்பொருளிலும் வராமல் தம்மைத்தாமே குறித்து நிற்கலாம். அப்பொழுது அவை தாம் ஓர் எழுத்தாய் இருத்தலைத் தெரிவிக்கும். ஒருவன் எழுதிய கடிதத்தைப் பார்த்து, " இதில் அ கலைந்துவிட்டது; இ நீண்டிருக்கின்றது,

உ வளையவில்லை, எ பெரிது" என்போமாயின், இவை இங்குச் சுட்டுவதும் வினவுவது மின்றி; அவ் வவ்வெழுத்துக்களின் பெயரையே உணர்த்துவதால், இவை இடைச்சொற்களாகா. எனினும், இவை இப் படித் தம்மையே உணர்த்தி நிலைமொழியாய் நிற்கும் போதும் வருமொழிமுதல்மெய் இடையில் இரட்டும்.

உதாரணம்: —

அ + வளைந்தது = அ + வ் + வளைந்தது
= அவ்வளைந்தது

இ + நீண்டது = இ + ந் + நீண்டது = இந்நீண்டது
உ + பெரிது = உப்பெரிது
எ + கெடும் = எக்கெடும்.

ii. நிலைமொழி, அ, இ, உ, எ என்னும் இடைச் சொற்களிலொன்றாக இருக்க (அல்லது அவைதம்மை யே உணர்த்தி நிற்க) வருமொழி முதலில் யகரமெய் வருமாயின், இடையில் வகரமெய் தோன்றும்—(முன் போல் யகரமெய்யே இடையில் இரட்டாது)

அ + யானை = அ + வ் + யானை = அவ்யானை
இ + யாழ் = இ + வ் + யாழ் = இவ்யாழ்
உ + யாறு = உ + வ் + யாறு = உவ்யாறு
எ + யாப்பு = எ + வ் + யாப்பு = எவ்யாப்பு

[குறிப்பு:—ய, யா, யி, யீ, யு, யூ, யெ, யே, யை, யொ, யோ யௌ, என்னும் யகாவுயிர்மெய் வரிசையில், யா என்னும் ஒரு எழுத்துத்தான் தமிழில் மொழிக்கு முதலில் வரக்கூடும். மற்று, யமன், யுவதி, யூகம், யோகம், யௌ வனம், போன்ற சொற்கள் தமிழல்ல, வடமொழிகளாம். இவைகள் வருமொழிகளானாலும், வ் தோன்றும் என்றே கொள்ளவேண்டும்.]

அ + யாது = அ + வ் + யாது = அவ்யாது
இ + யாது = இ + வ் + யாது = இவ்யாது

என்பனபோல இந்நிலைமொழிகள் சுட்டுக்களாயும் வினாவாகவும் ஆகாமல் தம்மை யுணர்த்தி நிற்கும் போது, வருமொழி முதலில் யகரம் வரின் இடையில் வ் என்னும் மெய்யே தோன்றும்.

[சில சமயம், அ + யானை = அவ்வியானை, இ + யாழ் = இவ்வியாழ், என இவ்விதம், வ் தோன்றுவதுமல்லாமல்

அ + யாழ் = அ + வ் + யாழ் = அ + வ் + இ + யாழ்,
= அவ் + வ் + இ + யாழ் = அவ்வியாழ்

என ஒரு இகரமும் தோன்றிப் புணரக் காணலாம். இதனை வேறோரிடத்தில் விளக்குவோம்.

# அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திர உண்மை.

[33-வது பக்கத் தொடர்ச்சி.]

## ii. சில அடியார் சரிதைகளும் அவற்றின் சான்றுகளும்:

முதல் வகுப்பாக நாம் எடுக்கத்தக்கதோர் அடியார் தொகையில், மெய்யடியானாய் உலகத்தொண்டு செய்து, அதன் வழியே சிவத்தொண்டுசெய்த நர சிங்கவர்மனும், அவ்வரசனால் ஆதரிக்கப்பட்ட நம் பியாரூரரும் அவர் தாய்தந்தை யிருவருமாம். நம் பியாரூரர் காலத்திய ஏனைய அடியார்களை இரண் டாம் வகுப்பாய் இணைப்போம். இவர் சரிதைகள் ஆராய்ச்சிக்கு மிகவும் சிறப்புடையன. இக்கொத் தின் பெருமலராய்ப் பேரின்பம் பெற்ற சேரமான் பெருமான் சரித்திரத்தில் சில விடயங்கள் நோக்கு வோம்.

சேரமான் பெருமான்நாயனார் சுந்தரருடன் திருக் கைலாயத்துக்குச் சென்றபோது தன் உடன்பிறந் தாள் மகனுக்குத் தான் வருமளவும் தன் அரசுரிமை யைக் கொடுத்துச் சென்றதாய்ச் சரித்திரவாயிலாக அறிகின்றோம். இக்காலத்திலும், திருவனந்தபுரத்து அரசர் சேரமான்மரபில் வந்த சைவஅரசரென்றும் அவருக்கு மருமக்கவழிப்பட்டமென்றும் பட்டங்கட் டும்போது சேரமான் பெருமான்நாயனார் வருமளவும் தேசத்தை ஆளுக வென்று பட்டங் கட்டிவருதல் தொன்றுதொட்டு வரும் வழக்கமென்றும், அறிகின் றோம். திருவஞ்சைக்களம் இராஜதானிப் பட்டணமா யிருந்தது. அது திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்ட தென்றும் இதற்குச் சம்பந்தமாய்க் கொல்லம்ஆண்டு ஏற்பட்டதென்றும் அறிகின்றோம். ஆதலால் சுந்தரர் முடிவில் சேரமானுடன் திருக்கயிலாயத்திற்குச் சென்றது உண்மையென்றே ஏற்படுகின்றது. அத ற்கு அத்தாட்சியாய் நம்பியாரூரர் தடுத்தாட்கொண்ட பின்னர் மணக்கோலத்துடன் இருந்தவர், இரு மண மும் முடிந்த பின்னர் இல்லறத்தை வெறுத்துத்துறவி வேடம் பூண்டதற்கு, அவர் தேவாரத்தில் பல அகச் சான்றுகள் கிடைக்கின்றன:—

கீளார் கோவணமுந் திருநீறு மெய்பூசி யுன்றன்
தாளே வந்தடைந்தேன் றலைவாவெனையேன்றுகொணீ!
வாளார் கண்ணிபங்கா மழபாடியுண் மாணிக்கமே!
ஆளாய் நின்னையல்லா லினியாரைநி னைக்கேனே ?

"வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்குங் குழைக்கா துடைவே தியனே !
இறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத் தொடுதோள் பலவிற் றவிழக்
கறுத்தாய் கடனஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் றலையைந் திலுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ் சைக்களத் தப்பனே"

இவ்வாறு சுந்தரர் சந்நியாசம்பூண்டது உண்மை யென்று இன்னும் பற்பல அகச்சான்றுகளால் அறி கின்றோம். சேரமான் பெருமான் சுந்தரருக்கு மிக வும் சிறந்த நண்பர் என்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. இவராலேயே, தமிழ்நாட்டு மூவேந்தரும் மனம் ஒத்து சிவவழிபாடு செய்தனர் என்பதும், இம்மூவேந்தரின் இடையே தொன்றுதொட்டிருந்த விரோதங்களுங் கலகங்களும் அற்றனவென்பதும், இவர் திருப்பரங்குன்றத்துப் பதிகத் திருக்கடைக் காப்புச் செய்யுளால் காண்க:—

அடிகே ளுமக்காட்செ யவஞ்சு துமென்
றமரர் பெருமானை யாரூர னஞ்சி
முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்தாறு மோர்நான்கு மோரொன் றினையும்



படியாவி வைகற்று வல்லவ டியார்
பரங்குன்ற மேய பரம னடிக்கே
குடியாகி வானோர்க்கு மோர்கோவு மாகிக்
குலவேந்த ராய்விண்மு முதாள்ப வரே.

இதனால், சோழன் அக்காலத்தில் பாண்டியன் மகளை மணம்புரிய மதுரைக்கு வந்திருந்தனன் என் பது செவ்வனே புலப்படுகின்றது. அச்சோழனுக்கும் கருவூரில் துஞ்சியபுகழ்ச்சோழருக்கும் எத்தகைய சம்பந்தம் என்பது மாத்திரம் விளங்கவில்லை. அப்பர் சம்பந்தர் தேவாரங்களில் காணப்படாத பல யுத்தங் களைப்பற்றியும் அவற்றில் கீர்த்திபெற்ற வீரர்களைப் பற்றியும் நாம் சுந்தரர் தேவாரத்தில் அறிகின்றோம். அப்பர்காலத்தில் வடநாட்டில் வடுகர் முதலியோர் படையெடுத்து வந்ததாயும் அவர் தமிழ்நாட்டில் பிர வேசியாவண்ணம் கலிப்பகைநாயனார் சென்று அவர் களை வென்று, வீரச்சொர்க்கம் அடைந்ததாயும் பெரியபுராணத்தில் நாம் அறிகின்றோம். அதனால் வட நாட்டில் யுத்தம் சிலகாலம் நடந்தது உண்மையென் றும், இதன் சம்பந்தமாய்ச் சிறுத்தொண்டர்*வாதாவிக் குச் சென்று யுத்தம் வென்று தமது வெற்றியைக் கல் வெட்டில் காட்டியதாயும், தற்கால ஆராய்ச்சியில் ஏற் படுகின்றது. அப்பர் சம்பந்தர் காலத்திற்குப் பின்னர்த் திருநெல்வேலியில் யுத்தம் நடந்ததாயும் அதில் பாண் டியன் ஈழநாட்டின் சேனைகளின்பேரில் வெற்றி பெற்ற தாயும் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடப்பட் டிருக்கின்றது. "நெல்வேலிவென்று நின்றசீர் நெடுமா றன் அடியார்க்கு மடியேன்" என்றார். அக்காலத்தில் அதிகாயசூரனை கோட்புலிநாயனார் தனது குமாரத்தி களைச் சுந்தரருக்குச்சமர்ப்பித்ததும், அவர்களைத் தன் குமாரத்திகளென்று சுந்தரர் ஏற்று, வனப்பகையப் பன் † சிங்கடியப்பன் என்று தன்னைத் தேவாரத்தில் சுந்தரர் பாடுவதையும் காண்க. இக் கோட்புலிநாய னாரின் சௌரியம் சுந்தரர் நாட்டியத்தான்குடி திருப் பதிகத் திருக்கடைக்காப்புச் செய்யுளில் காண்க.

"கூடா மன்னரைக் ‡ கூட்டத்தில் வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன்
றிருவா ரூரனு ரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் றொண்டீர்
பாடுநும் பாவம்பற் றறமே."

சுந்தரமூர்த்திநாயனார் நண்பர்களெல்லாரும் பெ ரும்பாலும் அரசர்களும் பிரபுக்களுமேயாம். ஆயி னும் இவர் ஏழைகளை அலட்சியம் செய்யவில்லை. இவர் திருக்கொப்புளியூர் அவனுசியில் முதலையுண்ட பாலனை அழைத்த தன்மையை நோக்குக. இது உண்மையான சரித்திரமென்பதற்கு அகச்சான்று தேவாரத்தில்,

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய் !
புரைக்கா டுசோலைப் புக்கொளி யூரவி நாசியே !
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு
[காலனையே

இது, எப்படியிருக்கின்றதென்றால், குண்டையூர்க் கிழவன் தந்த நெல்லைப் பூதகணங்களால் பரவை நாச்சியார் வீட்டிற்குக் கட்டியனுப்பச் செய்யும்படி சிவபெருமான் உத்தரவு கொடுப்பிக்கச் செய்தது போல் இதுவும் ஒரு திருவிளையாடலாம்.

இதுபோலவே, உயிர்துறந்த ஏயர்கோன் கலிக்கா மனை மீட்டும் உயிர்ப்பித்துத் திருப்புன்கூரில் பஞ் சத்தை நீக்கிப் பன்னிரண்டு வேலி சிவபெருமானுக்கு வாங்கிக்கொடுத்த நிலங்கள் இன்றும் உள :—

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கோள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே !

ஏத நன்னில மீரறு வேலி
யேயர்கோ னுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன்
சடைமி சைமல ருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன் ;
பூம்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே !

* "மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங் கைவரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையு
மின்னன வெண்ணில கவர்ந்திங்கிய லரசன்முன் கொணர்ந்
தார்" —சேக்கிழார்.

† செறிந்த சோலைகள் சூழ்ந்தநன் னாற்றெஞ்
சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை
மறந்து நான்மற்று நினைப்பதே தென்று
வனப்ப கையப்ப னூரன்வன் றொண்டன்
சிறந்த மாலைக ளஞ்சினோ டஞ்சும்
சிந்தை யுள்ளுரு கிச்செப்ப வல்லார்க்
கிறந்து போக்கில்லை வரவில்லை யாகியின்ப
வெள்ளத்து ளிருப்பர்க ளினிதே.

‡ இப்பதிகத்திலே கோட்புலிநாயனார் பகைஞர் வெம் முனைமேற் சென்றது சுந்தரமூர்த்திநாயனார் திருநாட்டி யத்தான்குடிக்கு எழுந்தருளியதற்கு முன்பென்று விள ங்குகின்றது. அவர் சரித்திரமோ யுத்தத்தினின்று மீண்ட வுடனே தந்தையார் தாயார் உடன்பிறந்தார் முதலா னோரை வாள்கொடு துணித்துத் தானும்சிவனடி யடைந்தா ரென்று காட்டும். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரணு தல் அறிஞர் ஆராய்க.

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய் மொழி

### யோகம்—சுத்தாத்ம தர்சனம்

### Self-realisation—Cosmic Consciousness.

29-வது பக்கத் தொடர்ச்சி.

ஆத்மதர்சனத்தை அனுபவித்தவர்கள் என்பதற்கு அடையாளம் என்னவென்று ரிச்சர்ட் மாரிஸ் ப்யூக் என்பவர் வரைந்திருப்பதையும் அதற்கிணங்க இம்மகானுபாவன் நம்மாழ்வார் பாசுரம் அமைந்திருப்பதையும் ஒப்புநோக்குங்கால் மிகவும் ஆச்சரியமான பொருத்தங்களைக் காண்கின்றோம். ஆதலின், நம்மாழ்வார் பாசுரம் ஒன்று கூறி, அதனிலுள்ளபதங்களின் பொருள் இன்னதென்று காட்டி அதற்கு நேரான வாசகங்கள், ப்யூக் என்பவர் எழுதிய (Cosmic Consciousness) என்னும் நூலில் இருப்பனவற்றையும் அயலயல் எடுத்து எழுதுவோம்.

பாசுரம்.

நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு
அதனுள் நேர்மை அதுவிதுவென்று
என்றும் ஒருவர்க்கு உணரலாகாது
உணர்ந்து மேலும் காண்பரிது
சென்று சென்று பரம்பரமாய்
யாதுமின்றித் தேய்ந்தற்று
நன்று தீதுஎன்று அறிவுஅரிதாய்
நன்றாய் ஞானம் கடந்ததே. (8-8-5)

நின்ற - தேஹம் இந்திரியம் மனசு பிராணன் இவைகளை நடத்தி, இவைகள் அழியும்போதும் தான் நசிக்காமல் நின்ற—

He knows uithout learning, from the mere fact of illumination and entryinto Cosmic Consciousness that individual existence is Continuous beyond what is called death.

ஒன்றை - விலக்ஷணமான சுத்தாத்ம சுவரூபத்தை-

This Cosmic Consciousness Jesus called the Kingdom of Heaven, because of the peace and happiness that belong to it and which are its most characterestic features.

உணர்ந்தேனுக்கு - அவன் அருளால் அறிந்த எனக்கு—மற்றவர் அறிவது அரிது என்பது சூசிதம்.

அதின்-அந்த ஆத்மசுவரூபத்தின்—(Consciousness of the Cosmos) சுவரூப விளக்கத்தில் ஜீவாத்மா புலப்படுதல் உலகத்தின் வடிவையே சோதித்துத் தருகிறது.

நுண் - அதிஸூக்ஷமமான, நேர்மை - வைலக்ஷணியம்.

"Along with the consciousness of the Cosmos then occurs an intellectual enlightenment or illumination which alone would place the individual on a new plane of existence"

ஒன்றும் - கொஞ்சங்கூட, ஒருவருக்கும் - எத்தனை ஞானவான்களுக்கும், அது இது வென்று - நடந்த அல்லது நடக்கிற விஷயங்களோடு ஒத்துள்ளது என்று, தன் கேள்விகளாலும் மனப்பயிற்சியாலும், உணரலாகாது - அறிய முடியாது.

"Instantly following the above sense and emotional experiences there comes to the person an intellectual illumination quite impossible to describe, like a flash there is presented to his consciousness a clear conception (vision) in outline of the meaning and drift of the universe.

உணர்ந்து - ஒருகால், கேள்வி மனசின் உணர்ச்சி முதலியவைகளால் அறிந்து, மேலும்-சமாதிவரையில் ஏறினும், காண்பு அரிது - காண்கைக்கு அரிது, சென்று சென்று - (இம்மஹாநுபாவன் தான் அறிந்ததை உரைக்கிறார்) வேதாந்த சித்தாந்தங்களிலுள்ள மனப்பகுதிகளான அன்னமய பிராணமய மனோமயங்களை எல்லாம் வியாபித்து, பரம்பரமாய் - மேலான மனப்பகுதிகளான பிராணமய மனோமயங்களையெல்லாம் அதிக்கிரமித்து, அதாவது அவைகளெல்லாம் அல்லாதபடி—மொத்த தாத்பரியம் "வெகுஉத்கிருஷ்டத்தை உடைத்தாய"

Especially does he obtain such a Conception of the whole as dwarfs all Conception imagination or speculation springing from or belonging to ordinary self consciousness, such a Conception as make the old attempts to mentally grasp the universe and its meaning petty and even ridiculous.

யாதுமின்றி-அவற்றின் சுவாபங்கள் ஒன்றுமின்றி, தேய்ந்து - அதிக ஸூக்ஷ்மமாய், அற்று - அவற்றோடு ஸம்பந்தமற்று, நன்று தீதென்று - நல்லது கெட்டது என்ற விபாகமில்லாமல், அறிவரிதாய - அறிவதற்கு முடியாத—மனிதர் இந்தரியங்களால் அறியும் கந்த ரூப ஸ்பரிச முதலாய உணர்ச்சிகளால் நிரூபிக்க முடியாத

My vision was greater than our speech which yields to such a sight"

நன்றாய் - கல்யாண தமமாய், அதாவது ஆநந்த சுபாவத்தினால் எல்லா நுகர்ச்சியும்விட இன்பமாய்

Along with the consciousness of the Cosmos is added a state of moral exaltation, an indescribable feeling of elevation elation joyousness" (extracted from James', Varieties of Religious Experience)

ஞானம் கடந்தது - சாதாரணமான விஷய ஞானத்துக்குக் கோசரமில்லாததாய் அதிக்கிரமித்துக் கடந்து போயிற்று.

The speech is the tally of the self consiouses intellect. It can express that and nothing but that. but it cannot tally and cannot express the cosmic state.

இதை ஆத்மாவலோகனம் என்று ஸ்ரீ ராமாநுஜ முனி கூறியுள்ளார்.

The mysteries of which he discovered were not reported to him (by his senses) he beheld them"

Jacob Behmen.



He sees that the life which is in man is internal and that the soul of man is as immortal as God.

As Dante says of things he saw in Heaven "My vision was greater than our speech which yields to such a sight"

முன் இவ்வாழ்வார் கூறிய பாசுரங்களுக்கு யாம் அர்த்தம்வரைந்துள்ளவற்றில் இவ்வாத்மாவலோகனம் ஆனந்தமயமென்று சில இடங்களில் குறிப்பிட்டுஉள்ளோம்.

"I am satisfied— I see dance laugh sing"
O joy of my spirit it is uncaged—it darts like lightning"—Walt Whitman.

"Joy always Joy"

"All sorrow finished—The deep deep ocean of joy within"—Edward Carpenter.

Dante felt with the impact of Cosmic consciousness that "he was transhumanised into god"

இதைப்பற்றி இன்னும் வேறு அம்சங்கள் பகவத்கீதையின் சார்பாகக் கூறுவதற் கிருக்கின்றன.

அதன் முன்னர் இதைப் படிப்பவர்களுக்கு ஒன்று உணர்த்த உள்ளது. இவ்வாழ்வார் தத்துவ உணர்ச்சியில் வெகுதிறமாய்த் தேர்ந்தவரென்றும் இவர் உலக ஆசாரியாக விளங்க மாட்சிமை பெற்றவரென்றும்கூறியுளோம். மேல்கண்ட தத்துவதரிசி ப்யூக் என்பவர், ஆத்ம சுவரூபத்தைக் கண்டுகளித்தவர் 40, 50 பேர் சாக்ஷியம் தம் புத்தகத்தில் கூறியுள்ளார். இந்த ஆத்மதத்துவ நிச்சயம் ஒன்று இல்லாவிடின் இவர்கள் ஒன்றுபோலவே கூறக்கூடுமோ? காம்போதி என்ற ராகம் ஒன்றிருப்பதாக நாம் எங்ஙனம் அறிகிறோம். பாட்டுக்கச்சேரியில் ஒருவன் இந்த ராகம்பாட அங்குள்ளார் 40 பேர், பாடுவது காம்போதி ராகம் என்று ஒப்புக்கொண்டால் அங்ஙனே சுரங்கள் அமைந்த ஓர் ராகதத்துவ முள்ளதென்று யாவரும் தேர்ச்சியாய்க் கூறலாம். நாலாயிர வருஷங்களுக்கு முன்னர் நம்மாழ்வார் இந்தத் தத்துவத்தை விளக்கியுளர் என்றால் அவர் குலபதியாக அமைய என்ன தட்டுளது. இதுநிற்க, பகவத்கீதையில் இந்த யோகம் மனிதப்பிரயத்தனத்தால் சாதிக்கக்கூடுமென்றும், ஆறும் அத்தியாயத்தில் அது நிறைவேறப் பகவானைக் குறித்து யோகசாதன ஆஸனமனைய நியமங்களுடன் ஒருயோகு புரிய உரைத்துளார். 12 வது அத்தியாயத்தில் 13, 14, 15, 16 சுலோகங்களிலும், 5 வது அத்தியாயத்தில் 25வதுசுலோகத்திலும் முறையே ஷை சுலோகங்களில் குறிப்பிட்ட சிலருக்கு இந்த யோகம் வாய்க்குமென்றும், வாய்த்தால் அதன் பலன் இன்னதென்றும் அறுதியிடுகிறார். நம்மாழ்வார் இந்த யோகம் முடிவுபெறுதென்று ஒருவாறு நிஷ்கரிஷித்துள்ளார். விமர்சிக்கும்போது இந்தத்தேசத்தில் பௌத்தமதத்திற்கு முன்னும், இந்த யோகம் சாங்கியம் என்று பெயரிட்டுக்கொண்டு உலாவியதென்று தெரியவருகிறது. மேல்நாட்டில் இம்மார்க்கம் கண்டவர் ஆத்மசுவரூபம் தங்களுக்குத் தற்செயலாய் நேர்ந்ததென்று அத்தாக்ஷி கூறியிருக்கிறார்கள். நம் தேசத்திலோ இதற்கு இந்த யோகம் உளதென்றும் இன்னார் இந்த யோகுபுக அருகரென்றும், அது சாதிக்கவல்லர் அரிதாயினும் அருள்பெற்றவர்களுக்குச்சாதிக்கவல்லமையுண்டென்றும் கூறியுளார். கீதை இதைபற்றிக் கூறியுள்ளதை விசாரிக்கப்புகின் இதுபோல் இரண்டொரு வியாஸம் வரைவது அவசியமாகும். ஆயினும் இவ்வாழ்வார் இதற்கடுத்த பாசுரத்தில் கூறியுள்ளதை உரைக்காவிடில் விஷயம் பூர்ணமாகாது.

நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்தவரும் பெரும்பாழ்
உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு
அதுவே வீடு வீடாமே.

இதன் கருத்து:-ரசயுக்தமான உலக விஷயங்களினின்றும் இந்திரியங்களை இழுத்து அடக்கி ஆத்மவிஷயத்திலேயே உறுதிகொண்டு அதில் ஊக்கமாய்க் கடைபிடித்தால்தான் ஆத்மசுவரூபம் கைவரும். பிருகிருதி விஷயங்களிலிருந்து இவன் இந்தரியங்களை அடக்குவது அரிது. ஆகையால் யோகம் கைகூடுவது மரிது. பின்னரும், இறக்கும்போதும் வியாதி துன்பங்களாலும் பிணிகளாலும் உறவினர் அநுராகத்தாலும் ஆசைகள் குடிகொண்டு விலகாமையாலும் அந்தியத்தில் பகவானோடு தன் ஆத்ம்சுவரூபம் விபுவுள்ளதென்று அநுஸந்திக்கப் பிராப்தமாகாது. இதுபற்றி இந்த யோகு வாய்த்தலரிது என்று கூறுகிறார். கீதையில் 5-25-ல் "பாபங்களைப் போக்கடித்துக் கொண்டு சீதோஷ்ணாதி துவந்துவங்கள் (Pair of opposites) அற்றவர்களாய், இந்தரியங்கள் மனசு இவைகளைத் தன் வசமாக்கி அடக்கி எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை கோரிக்கொண்டிருக்கிற தபசிகள் தங்கள் ஆத்மாநுபவ சுகத்தை அடைகிறவர்கள்." கீதையில் 12வது அத்தியாயத்தில் இதற்கு முன்பு நாம் குறித்துள்ள சுலோகங்களில் இத்தபசு நிறைய வாய்ந்தவரின் இலக்ஷணங்களை எண்ணியிடுகிறார். இதை விவரிக்கில் மற்றொரு கட்டுரை எழுதவேண்டி வரும். ஒன்று மாத்திரம் செப்ப உளது. இந்தக் குணங்களெல்லாம் ஆத்மசுவரூபத்தை (Cosmic consciousness) அடைந்தவர்களாகப் பியூக் என்பவர் சொல்கிற பெயர்களுக்கெல்லாம் இருந்தனவென்று அவர் மேல்கண்ட புஸ்தகத்தில் விவரமாய் எழுதி உள்ளார். இந்த விஷயங்களை அப்புத்தகத்தில் காணலாம்.

189087

# இலஞ்சிப் பாவை.

## 3. ஆரூடம்.

*நேருறு ராசி நாத னின்றவ னாரூ டத்தைச்*
*சீருட னுரைப்ப தென்றே செப்பினர் கணித நூலோர்*

குழையி னோசை யடங்கி யெங்கும் அமைதியுறவே அம்மாது தரியாது ‘அப்பா’ என்றழைத்தாள். அவ்வொலியை வனியும் கனியுடனேற்றுக் காடெங்கும் பரப்பிற்று. ஆயினும் அன்புடைத் தாதைதன்னருங்குரல் அவளுக்கெட்டிற்றிலது.

34-வது பக்கத் தொடர்ச்சி.

மேனுள் துறந்தோன்றலைத் தொடர்ந்துசென்ற தொல் வியாதன் விளிக்கு விடைபகர்ந்த அவ் வியங்கு திணை நிலைத்திணைப் பொருள்களே போலும், இங்கும் மகளொலிக்கு எதிரொலி தந்தவை. சிறிது நேரஞ் சென்றபின்றை மடமங்கை இவள் மீண்டும் சற்றே உள்ளடங்கிய குரலோடு ‘மால் வண்ணரே! விளித்தது நீவிரோ ?’ என்று வினவினள். நமது வேட்டை வீரனும் வெளிவந்து குழையை முழக்கி யம்மழைபொரு குழலினளைப் பேதுறச் செய்தபிழை தனதேயெனப் பணிவுடன் மொழிந்தனன்.

ஏதிலா னொருவனைக்கண்ட எழின்மடந்தையும் துணுக்குற்று, துடுப்பினல் தோணியைத் தண்ணீரில் தள்ளிச் சிறிதுதூரம் செலுத்தி நின்று, தனது உத்தரீயத்தைத் திருத்தி, மனக்குழப்பம் மாறப்பெற்றபின், வீரமைந்தனை யேறிட்டு நோக்கினள். வஞ்சியரஞ்சும் தகைமைத் தல்லன அவனது வடிவமும் தோற்றமும். உயர்ந்த உருவத்தையும் களங்கமற்ற முகத்தோற்றத்தையுங் கண்டு அஞ்சுபவருமுண்டோ வுலகினில் ?

உண்மையை உரைத்தன அவன் கண்கள் ; வீரத்தை விளக்கின வீங்கு தோள்கள் ; சீற்றத்தைச் செற்றன முறுவல்; தறுகணாண்மையைத் தெரித்தன வேலும் வெம்படையு மின்மை; பணிந்த மொழியும் கனிந்த சொல்லும் மறைத்தன அவன்றன் கண்ணிற் சொலிச் செவியினேக்குந் தன்மையையே !

**வீரன்:**—இன்று காலை அரசருடன்கூடி வேட்டையாடப் புறப்பட்ட பரிவாரத்தினரில் நானுமொருவன். என் நண்பர்களை வியக்கச் செய்யலாமென் றெண்ணி மானைவிடாது துரத்திவந்து கூட்டத்தாரை விட்டுப் பிரிந்து தனிமையில் இவ்விடம் வழிதப்பி வந்துவிட்டேன். மானோ கண்காணுதபடி ஓடியொளித்துக் கொண்டது. ஆகையால் துணைவரை அழைக்கத் துளைக்கருவியை ஊதினேன். எனது நற்றவத்தால்—

பாவை—ஐய ! எமது மலைநாட்டிற்கு உமது வரவு நல்வர வாகுக. வழிதப்பியவருக்கு என்றும் திறந்த வாயிலை யுடைத்து எமதில்லம். நகரமாந்தருக்கு நாட்டின் நடையுடை பாவனைகள் ஏற்பில்லை யெனினும், எம்மாற் கூடியவரை உமக் குகந்தன நல்கி நீரினிதின் வைகுமாறு முயல்குவம்.

வீ:—உங்களை நான் அதிகமாக வருத்தப்போவதில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் இரவைக்கழிக்க இடமொன்றுதான்.

பா:—உணவில்லாமல் உய்யும் வகையை இளமையிலேயே கற்றறிந்தீர் போலும். எமது மலைச்சாரில் பலர் கடுந்தவம் புரிந்து மெய்யை வருத்திக் கற்க முயல்வதெல்லாம் இனி வீணே !

வீ:—குன்றும் குறைகடலுங் திரிபவர் நெய்யுடையடிசிலும் வேண்டியே நைவதுண்டோ! உடலை உடற்றும் பசி வீரரை என் செய்யும்? யாங்கள் ஒரு நாளைக்கேற்று இருநாளைக் குணவின்றி இருநூறு காவதம் செல்லவேண்டி நேர்வது முண்டு.

பா:—அவ்வாறு இருநூறு காவதமில்லை என்னுடைய வீடு. அதோ தெரியும் தனித் தீவில்தான் உள்ளது எம்முடைய காட்டரண்.

வீ:—உன்னையொத்த வனப்......

பா:—மேலும், நாங்கள் உங்களுடைய வருகையை அறியாமலில்லை. இன்று காலையில் இரவியும் பாவையை விட்டெழுமுன், உமக்காக வோர் அறை, மஞ்சம் முதலியனவற்றோடு அமைக்கப்பெற்றுளது. பலவின் காயொடு வால்வரிக் கொடுங்காய் முதலிய அமுதொடு அட்டுள்ளோம். ஆகையால் இரவையிங்கே யினிதே போக்கலாம்.

வீ:— அம்மம்ம ! ஈதென்ன விந்தை ! இதில் ஏதோ பிழையுளது. நீ குறிக்கும் ஆடவன் நானல்லன். நல்லெண்ணத்தோடு முகமன் கூறினையேனும், நீ சொல்வது ஏற்றுக் கொள்ளும் தரத்ததன்று. ஏதோ துணைவரைத்துறந்து வழிதப்பிக் குதிரையுமிழந்து இவ்விட மடைந்தேனே யொழிய, இதற்குமுன்னர் நானிந்த மலைநாட்டைக் கண்டதில்லை. ஆதலால் எதிர்பார்த்திருக்கும் விருந்தினனுக் களிக்கும் உபசாரத்தை நான் பெறுவது நேர்மையன்று. இன்றைக்கே முதலில் இலஞ்சியையும், அதில் உறையும் தேவி—

பா:—உலர்ர் ஏரிக்கரையில் இதற்குமுன் நீர் உலவினவ ரல்லரென்பதை நானறிவேன். ஆயினும் நரைத்த முடியுடன் பழுத்த எங்கள் ஆலாலசுந்தரர் உங்கள் வருகையை முன்னறிந்துரைத்துள்ளார். முருகக் கடவுளின் முழுஅருள் பெற்ற அவருக்கு ஆரூடம் தெரியும். உமது முகத்தோற்றத்தையும், பாசிலையெனப் பசுமைபெற்ற உமது உடையையும், இடைக் கச்சிலமர்ந்த பொலங்குழையையும் கண்டறிந்து சொன்னர். மரங்களடர்ந்த காட்டில் உமது குதிரை விழுந்து இறந்துகிடப்பதும், கருநிறமுள்ள உமதிரு நாய்கள் உம்மைப் பின்பற்றுவதும் அவர் ஞானக் கண்ணில் தென்பட்டன. ஒரு சீமானை வரவேற்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யலாக வேண்டுமென்று சொன்னரேனும், நான் அதை நம்பவில்லை. நீங்கள் குழையை முழக்கியபோது எனது தகப்பனரென்றே எண்ணினேன்.’’ என்று சொல்லிக் கொண்டே ஓடத்தைக் கரைசேர்த்தாள்.

வீ:—(புன்னகையோடு) “நல்லது நீர்சூழ்ந்த தீவில் காட்டரணில் கடுங்காவலி லுறையும் அரசிக்குதவ இறைவனல் அனுப்பப்பெற்ற வீரன் நானேயாகில்,



வருந் துன்பங்களை யொருபொருட் படுத்தாது, இங்குள்ள அரக்கரையெல்லாம் யான் ஒரு நொடியில் வென்று, உனது மதிவாண் முகத்தில் முறுவல் தோன்றச்செய்வேன். தற்காலம் உனது மெல்லிய விரல்கள் துடுப்புக்கொண்டுழ, நான் உட்கார்ந்து வருவது என் ஆண்மைக்கு அழகாகாதாகையால் அதை நானே உந்தக் கடமைப்பட்டிருக்கிறேன்’’ என்று சொல்லித் துடுப்புகளை அவளிடமிருந்து பெற்றான்.

பா:—தற்காலம் எம் வீட்டில் அரக்கருமில்லை அவுணருமில்லை. முதுமையாளராகிய ஆலாலசுந்தரரும் பெண்களுமே இருக்கிறோம். உமது வீரத்திற்கிங்கோ இடமில்லை.

வலிதண்டை வலித்த வீரன் கரங்கள் அப்பணிக்குப் பணியவில்லை. முன்பினவ் வேலையைச் செய்தறியாதன அவன் கைகள். ஓடமும் பெருவலியாற் சென்றதேயன்றித் துடுப்பின் துணையாற் செல்லவில்லை. இதைக்கண்ட மாது புன்னகை கொண்டாளேனும், வீரன் ஏளனஞ்செய்வதாய் எண்ணுவானென அஞ்சி அதை யுள்ளடக்கினள். நாய்களும் நீட்டிய தலையுடனும், நடுங்கிய குரலுடனும் ஓடத்தைப் பின்பற்றி நீந்திச்சென்றன. சிறிது நேரத்தில் படகும் கரைசேர, இருவரும் இறங்கி யதை யோரிடத்தில் நிறுத்திவைத்தனர். வீரன் கண்ணிற் பட்டவையெல்லாம் பெருங் காடே. எங்கும் செறிந்து கடற்கரையைக் கவிந்திருந்தன தருக்கள். அது மனிதர் காற்பட்ட மண்ணென்று சொல்வதற் கிடமில்லாதிருந்தது. பாதையைப் பல மாதிரங்களில் தேடியும் அது அவனுக்குக் கட்புலனாகவில்லை. வனிதையும் சிறிது நேரத்தில் கண்ணிற்காணுமல் மறைந்து வாளமாகச்செல்லும் ஓரடிப்பாதை யொன்றை யெய்தி நடக்கலுற்றாள். அது ஒருபசும்புற்றரைக்குப் போகும்வழி. புற்றரை நடுவண், நட்டமுற்றவழி நாடுவதற் கமைந்திருந்தது ஓர் மரத்தாமம்.

நீடிய வவ்வுறையுளும் உயர்ந்து கானகத்திற் கைக்கெட்டிய கோடரங்களால் கட்டப்பட்டிருந்தது. நவியத்தால் நறுக்குண்ட நடுமரங்களே யதற்குக் கற்சுவர்கள் ; களிமண்ணே சுண்ணம் ; பாசியே பூச்சு ; மரக்கிளைகளே உத்தரங்கள் ; விழலே கூரை. இவ்வியநகர்முன்னோர் தாழ்வாரமும் அதிற்படர்ந்த சில கொடிகளு மிருந்தன.

பட்டைக ளுரிக்கப்படாத பாதபங்களின் கிளைகளால் யாக்கப்பட்ட அத்தாழ்வாரத்தை யடைந்ததும் மடமாதும் குறுநகையோடு “குலதெய்வத்தை வழிபட்டு இம்மந்திரவாதியின் மந்திரம் புகுமின்’’ என்றாள்.

‘என் அத்தமும் வாழ்வும் வணங்கு தெய்வமும் இவ்வகத்தே யுள’ எனமொழிந்து அவ்வில்லத்தி லவன் காலூன்ற, அக்கணம் சினத்தாற் சீறியதுபோல் கனத்த இரும்பினொலி கணீரென்று முழங்கிற்று.

# கம்ப ராமாயணம்

## அயோத்தியா காண்டம்.

### 1. மந்திரப் படலம்.

**இருப்பதே துணையென இலங்கு மேன்மையோர்.**

அறுபதினுயிர மாண்டளவு மகவின்றி யிருந்துயருழன்ற தயரதன் அரிதிற் பெற்ற இராமனைத் தான் இழந்தனன் என்ன இருமுறை முன்னர்த் துணுக்குமுற நேர்ந்துளது. படையூற்றமிலாச் சிறியனுயிருந்தவக் கருநிறச்செம்மலைக் கோசிகன் வந்து தன் வேள்விகாக்கக் கேட்டபோது, “அரக்கருக் கிரையாக்கவோ இராமனைப் பெற்றே’’னென ஆருயிர் தளர்ந்துளம் அழிந்தனன் மன்னவன். அன்னதன் முடிவோ வேந்தனது அச்சத்திற் கெதிராகத் திருமகள் மணவினை தெரியக்காணுமொரு பெருமையாய் நிகழ்ந்தது. பின், இருபத்தொரு படிகால்வரை நிருபர்குலக் குருதிக் கறை யுறையும்மெறி மழுவாளவன் முற்பட்டகாலை, மைந்தனேடு தன் வாழ்வு மன்றே வீழ்ந்ததெனத் தயரதன் உயிருமுடலும் தடுமாறலாயினன். ஆயினும், மறமழிந்திழிந்ததொன்றே மன்னற்குளஞ்சியது. இராமனே தன் குலப்பகைவன் கோளினைக் குலைத்துச் சயமகள் சேர்ந்ததோட் செவ்வியனுகித் தன்தந்தைக்கு அளப்பரிய களிப்பை நல்கினன். மற்று இன்றைக்கோ தயரதன் நம்பியை நளிர்முடிசூட்டி நிலமகள் நலம்பெறு மணவினை சமைக்குஞ் சூழ்ச்சியனுகி உற்றது செய்ய முயலுங்கால் அவன தெண்ணமெல்லாம் அவலமாய் முடிந்தது. விலக்கரும் விதிதான் இடைப்புகுந்து எதிர்நடம் புரியும் விபரீதமிது. அரியணை அமர்த்தநின்ற மைந்தனை அடவிக்கே செலுத்தியதுமன்றி, இதுகாறும் “மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகிய’’ தயரதன் இனித்தன்னுயிர்க் குறுவதும் செய்ய வெண்ணிய அக்கணமே அவ்வுயிரினை ஆற்றொணு அருந்துயரா லுகுக்க நேர்ந்ததும் விதியின் வேகமே. இன்னபடி விதியின் வலிதூண்ட ஒருநாள்,

36 வது பக்கத் தொடர்ச்சி.

மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பரும யானையான்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினன்

[அம்பாரிதாங்கியதும், கோபம் பொருந்திய சிந்தனையுடையதும், பெரியதுமான யானைகளையுடைய தயரதன், மார்ச்சனையுடைய முரசங்கள் மேகம்போல் சப்திக்கவும், மூங்கில்களில் கட்டிய சாமரைகள் சுற்றிலும் வீசவும், மந்திராலோசனை மண்டபம் வந்து சேர்ந்தான்]

புக்கபின் னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினன்
ஒக்கநின் றுலகளித் தியோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினன்

[சேர்ந்தவுடன், அரசர்களையும், நிகரற்ற தன் சுற்றத்தாரையும், தன்பால் பக்ஷமுடையவர்களையும் போங்களென்று கருணையோடு அகற்றிவிட்டு, உலகை இடைவிடாது தக்கபடி காப்பவனுயினும் ஒருசெயலும் இல்லாதான்போல் அறிதுயிலில் அமர்ந்திருக்கும் திருமாலைப்போலத் தனியவன் ஆயினன்]

சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினான்

[ஆகி, சந்திரன்போன்ற முத்துக்கள் கட்டிய வெண்கொற்றக் குடையானது, தேவலோகத்தையும் தன்னுள் அடக்கிக்காக்கும் ஆணையையுடைய தயரதன், தன் குருவாகிய வசிட்டனையும், இந்திரனுக்குத் தேவர்கள் இருப்பது போன்று தனக்கு இருக்கின்ற மந்திரிகளையும் வரும்படி கட்டளையிட்டான்]

பூவரு பொலன்கழற் பொருவின் மன்னவன்
காவலி னாணையின் கடவு ளாமெனத்
தேவரு முனிவரு முணருந் தேவர்கள்
மூவரி னால்வரா முனிவந் தெய்தினான்.

[தேவர்களும் முனிவர்களும் உணர்ந்துள பிரம்மன் விஷ்ணு உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளோடு சேர்த்து நாலாவது மூர்த்தி என்று சொல்லத்தகுந்த வசிட்டமுனிவன், சித்திரவேலை யமைந்த பொன் கழல் அணிந்துள நிகரற்ற தயரதமன்னனைக் காவல் செய்யும் ஆக்ஞா தெய்வமென, அம்மண்டபத்தில் வந்து சேர்ந்தான்.]

அடிநிழல் அரசரை அளிக்கும் ஆய்கதிர் முடிநிழல் முனிவரர் சரணம் மூழ்குமாதலால் தயரதனுக்குக் கடவுள் தவத்தினானுயர் வசிட்டனாயினான். முன்னும் பின்னும் நோக்கி நடக்கும் மடங்கல் போன்றன கம்பரது பாசுரங்கள். அவ்வாறு நோக்குங்கால் ஒன்றினையொன்று விழுமிய பொருள்களால் விளக்கும் பெருமையைக் காண்கின்றோம். முன், திருவவதாரப் படலத்தின் முதலில் தயரதன், இத்தூய மாமுனிவரனைத் தன் தொல்குலத்

தாயருந் தந்தையுந் தவமு மன்பினால்
மேயவான் கடவுளும் பிறவும் வேறிலீ

என்று தொழுது மகவிலாக் குறை போக்குமாறு பணிவுடன் வேண்டுங்கால், அப்பாசுரத்தில் கடவுள் என்றதை இப்பாசுரம் ஆணையின் கடவுள் என விரித்துரைக்கின்றது. மற்று, 'பொருவில் மன்னவன்' தயரதன் ஆபவாறும் அவ்வசிட்டனது அருளே என்னற்கு, முன் மகன்தரு மா மகம் புரிந்திடக் கலைக்கோட்டு முனிவன் அயோத்திவந்தடைந்தநாள், வழுத்திய வேந்தனை நோக்கியவ் வருந்தவன்,

மன்னவர் மன்னகேள் வசிட்ட னென்றெனு
நன்னெடுந் தவன்துணை நவையில் செய்கைநீ
நின்னையிவ் வுலகினி னிருபர் நேர்வரோ

என வியந்துள வாசகத்திற் காணலாம். எவ்வகையில் தசரதற்கு வசிட்டன் துணையாயினா னென்ன உன்னுதல் வேண்டும். சனகன்பால் கோசிகன் குறித்த வண்ணம் தயரதனே, "தனுவன்றித் துணையில்லான்" அல்லனோ! எனின், இவ்விருபெரும் முனிவரில் உறுபொரு ளுணராம லுரைத்தவர் யாவர்? கூர்ந்து நோக்கின் கோசிகன் கூற்றிற்கும், கலைக்கோட்டு முனிவன் கூற்றிற்கும் முரணொன்று மிலது. உடனின்று உதவுஞ் செய்கையால் துணையாவார் ஒரு சாரார்; மற்றுத் தாம் இருத்தலாலேயே, யாதொன்றுஞ் செய்யாமல், வையகத்தை வாழ்விக்கும் பெற்றியோர் சில மேலோர். முன்னவரிற் பின்னவர் பெருமை சான்றவர் என்பதிலோர் ஐயமில்லை. கோசிகன் இல்லையென மறுத்தது முன்னினத்துத் துணைவரையே. கலைக்கோட்டு முனிவன் பின்னின்ற கருத்தில், வசிட்டன் தயரதனுக்குத் துணையென மதித்தனன். கடவுளர் மூவரும் முத்தொழில் புரிந்து காப்பவர். எவ்வுயிர் மாட்டும் செந்தண்மை பூண்டொழுகலால் அந்தணராய பெரியோர் தோன்றச்செய்யுந் தொழிலொன்றுமின்றியே, அறமலாது பிறிதொன்றும் நினையாது நிற்கின்ற நிலையிலேயே, நவையிலரசனுக்கு நற்றுணையாய் உயிர்களை உய்விக்கும் உதவியில் உயர்ந்தவராகின்றனர். "வசிட்டனென்னும் நன்னெடும் தவன்துணை நவையில் செய்கைநீ" என்று தயரதனை நோக்கிக் கலைக்கோட்டு முனியைச் சொல்வித்த கம்பர் மனதில்,

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

[வயது முதிர்ந்திருந்தும் யான் நரையில்லாமல் இருப்பது எப்படி ஆயிற்றென்று கேட்பீராயின், காரணங் கூறுகின்றேன். மாட்சிமை பொருந்திய என் மனைவியும் மக்களும் அறிவு நிரம்பினவர்களா யிருக்கின்றனர். என் தம்பியரும் என்னுடைய கருத்திற்கு இசைந்தவர்கள். அரசனும் நெறிபிறழாமல் காப்பான். அதற்குமேல், யான் இருக்கின்ற ஊரின் கண், கல்வியால்நிறைந்து, பொய்ப்புலன்களை அடக்கியகொள்கையை உடைய சான்றோர் பலர் உளர்—ஆயின் நரையுந் திரையும் எம்மை ஒருநாளும் நண்ணா]

என்று பிசிராந்தையார் புறநானூற்றில் பாடியுள பொருண்மொழிக்காஞ்சி, இருந்ததென்றே எண்ணல் வேண்டும். மன்னவற்கு அறமேவார், காவலின் ஆணையின் கடவுளாமாறு இவ்வாறெனில், கசட்டுறு வினைத்தொழில் கள்வராயுழல் அசட்டர்கள் ஐவரையும் அறுவராக்கிய வசிட்டன், பின் முடிபுனைய நின்ற இராமற்கு,

கரிய மாலினுங் கண்ணுத லானினு
முரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமொ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்

என்று அறிவுறுத்தியது அதிசயிக்கத் தக்கதாமோ! ஈதுரைத்த அவ்வந்தணன் பெருமையை அரசனுமறிவானாதலால் அவையின்கண் முதன்மையாக அவ்வசிட்டனே வந்தெய்தினான்.

இதன்பின் சுமந்திரரே முதலாக அமைச்சராயினானைவரும் அங்கு வரலாகின்றனர். அன்னவர் தன்மையைக் கம்பர் ஆறு பாசுரங்களிற் புகழ்கின்றார். இவ்வமைச்சரைப் பற்றிக் கம்பர் நூலில் நாம் இதுகாறும் ஒரு சொல் கேள்வியுற்றதில்லை.

அரசனது அங்கங்களுள் ஒன்றாய அமைச்சு தயரதற்கு அணியென்றேனும் இருந்திருத்தல் வேண்டுமென நினைப்பதல்லால் அவர் இருந்ததற்குச் சான்றாக ஒன்றும் நிகழ்ந்திலது. அரசியற் படலத்தில் யாதும் அமைச்சரைப்பற்றி இயம்பிலர் கம்பர். இவரொடு தயரதன் ஒருபோதும் இதன்முன் மந்திரஞ் சூழ்ந்ததாகவுந் தெரியவில்லை. வான்மீகி முனிவரோ இருமுறை தயரதன் தன் மந்திரிமார்களுடன் உசாவ



வைத்திருக்கின்றனர். கார்முக மிறுத்த வீரற்குத் தன் மாமகளை அளிக்க நினைத்த ஜனகன் விடுத்தவவ்வோலையைத் தயரதன் தன் மந்திரிகளுக்குக் காட்டி அவர்களது சம்மதத்தைப் பெற்ற பின்னரே புறப்பட்டானென வான்மீகம் கூறும். இச்சிறு சம்பவம் கம்பரில் இல்லை. இதுவுமன்றி, முதலில் தான் புத்திரப்பேறு அடையும்படி அசுவமேதயாகம் செய்ய நிச்சயித்ததும் அமைச்சர்களுடன் கூடிச் செய்த ஆலோசனையின் முடிவென வடமொழிமுனிவர் கூறுவார். கம்பரின்படி தயரதன் புத்திர னருளென வசிட்டனை வேண்டினா னல்லது அமைச்சரோடு அதுபற்றி யாதொன்றும் ஆய்ந்திலன். மற்றுப் பாலகாண்டம் ஏழாஞ் சருக்கத்தில் வான்மீகிமுனிவர் தயரதனது மந்திரிகளின் தன்மையை விரித்துரைத்துளார். அவைகளை நினைவிற்கொண்டும், திருவள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ள அமைச்சியலைத் தழுவியுமே கம்பர் தன் பாசுரங்க ளாறையும் பாடியுளார் என்பதற் கையமில்லை. ஆயினும் தன் முன்னையோர் இவ்விருவரும் இயம்பியுள சிலவற்றை விடுத்தும் மாற்றியும் தானே சிறிது சேர்த்தும் கம்பர் அமைச்சர்தம் மெய்த்திறம் கண்டுளார். மாபெரும் புலவர் இம்மூவர்தம் உரையையும் அயலயல் வைத்து ஒப்பு நோக்குங்கால் விழுமியபொருள் சில சிறக்கத்தோன்றிடும்.

வடநூல்முனிவர் அமைச்சியல் மதித்த விதம் பின்வருமாறு. இது, பண்டித நடேச சாஸ்திரியாரவர்களது மொழிபெயர்ப்பு:—

"தசரதமகாராஜருக்கு எட்டு முக்கிய மந்திரிகளிருந்தார்கள். அவர்கள் ஆலோசனையைச் சேர்ந்த விஷயங்களில் தேர்ச்சி யடைந்தவர்கள்; குறிப்பறிந்து நடப்பவர்கள்; வெகு ஆசாரசீலர்கள்; யஜமான விசுவாசம் அதிகமுடையவர்கள்; எப்பொழுதும் இராஜ காரியத்திலேயே கண்ணாயிருப்பவர்கள். அவர்கள் பெயர் திருஷ்டி, ஜயந்தர், விஜயர், சித்தார்த்தர், அர்த்தசாதகர், அசோகர், மந்திரபாலர், சுமந்திரர் என்பனவாம். இவர்களன்றி மிகுந்த நம்பிக்கையுள்ள இரண்டு முக்கிய புரோகிதர்களும் உண்டு. அவர்கள் குலகுருவாகிய வசிஷ்ட மகாரிஷியும், வாமதேவ மகாரிஷியும். இவர்களல்லாமல் வேறு அநேக மந்திரிகளும் புரோகிதர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் கல்வியில் சிரமப்பட்டவர்கள்; வெகு மானிகள்; சாமர்த்தியசாலிகள்; ஐம்புலன்களையும் அடக்கினவர்கள்; சகல சம்பத்தும் பொருந்தியவர்கள்; நற்குண நற்செய்கை யுள்ளவர்கள்; சாஸ்திரங்கள் யாவும் நன்றாய் உணர்ந்தவர்கள்; அதி பலசாலிகள்; வெகு கீர்த்தி யடைந்தவர்கள்; இராச்சிய காரியத்தில் எப்பொழுதும் கண்ணுள்ளவர்கள்; தாம் சொன்னபடி நடப்பவர்கள்; பராக்கிரமத்திலும், பொறுமையிலும் பேர்பெற்றவர்கள்; எப்பொழுதும் புன்னகையுடன் பேசுபவர்கள்; கோபத்தினாலாவது, காமத்தினாலாவது, இலாபத்தினாலாவது ஒருபொழுதும் பொய் பேசாதவர்கள். தமது இராச்சியத்திலும் அயல் இராச்சியங்களிலும் நடந்தவையும் நடக்கின்றவையும் நடக்க விருப்பவையுமான செய்திகளில் ஒற்றர்கள் முகமாக அவர்கள் அறியாதது ஒன்றுமில்லை. அவர்கள், நிச்சயித்த விஷயங்களை ஒழுங்காக எடுத்துக் கூறவல்லவர்கள்; முதலில் சோதித்து அறிந்து பின்பு உயிர்த்தோழர்களான மந்திரிகள் என்று அரசரால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள்; குற்றம் செய்தவர் தங்கள் புத்திரரா யிருந்தாலும் பக்ஷபாதமில்லாமல் தண்டனை விதிக்கும் சித்தமுள்ளவர்கள்; எப்பொழுதும் பொக்கிஷம் நிரம்பியிருக்கவேண்டிய மார்க்கத்தையும் சைநியங்களைச் சேர்க்கும் வழியையும் தேடிக்கொண்டே யிருப்பவர்கள். சத்துருக்களா யிருந்தாலும் குற்றமற்றவர்களாயின் அவர்களிடம் அம்மந்திரிகள் கெட்ட எண்ணம் வைக்கிற வழக்கமேயில்லை. அவர்கள் மிக்க வீரர்களாயும், எப்பொழுதும் உத்ஸாக குணத்தோடு கூடினவர்களாயும், இராஜதந்திரத்தை வழுவாமல் நடத்துபவர்களாயும், நல்லவர்களுக்கு நல்லவர்களாயும் பிராமணர்களையும் க்ஷத்திரியர்களையும் ஒருபொழுதும் வருத்தாதவர்களாயும், குற்றத்துக்குத் தக்க தண்டனை விதிப்பவர்களாயு மிருந்தார்கள்.

இத்தகைய நல்லமந்திரிகள் ஒரே மனமுள்ளவர்களாய் இராஜகாரியத்தை வகித்துவந்ததனால் அந்தப்பட்டணத்திலும், அதைச்சேர்ந்த தேசத்திலும் பொய்சொல்லுகிறவன் ஒருவனுமில்லை. அதுபோலவே துஷ்டனும், பிறன் மனைவிமேல் ஆசைவைப்பவனும் இல்லை. இராச்சியம் முழுவதும் சாந்தமாகவே யிருந்தது. அம்மந்திரிகள் எல்லோரும் நல்லஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு, நல்லொழுக்கம் உள்ளவர்களாயும் மன்னவர் நன்மையை நாடியவர்களாயும் இராஜகாரியத்தில் வெகுஜாக்கிரதை யுள்ளவர்களாயும் நடந்துவந்தார்கள்; அப்படியாயினும், நியாயந் தவறி நடவார்கள். அவர்கள் தங்களுடைய மேலான குணத்திற்காக அரசனால் ஆராய்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுடைய புத்தி பலவிஷயங்களிலும் சக்தியுள்ளதாயிருந்தபடியால் அயல் நாடுகளிலேயும் அவர்கள் புகழ் பரவியது. அவர்கள் சந்திவிக்கிரகம் என்ற இராச்சியதந்திரத்தின் உண்மையைச் செவ்வையாய் அறிந்தவர்களாயும், பரம்பரையான பெருந்தகைமையை யுடையவர்களாயும், தங்கள் ஆலோசனைகளைத் தங்களுக்குள்ளேயே காரியம் முடியும் வரையில் ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளுங் குணமுடையவர்களாயும், ஒவ்வொரு விஷயத்தையும் தீர்க்கமாய் ஆலோசிக்கும் நுட்பபுத்தி யுள்ளவர்களாயும், நீதிநூல்களை நன்றாய்ப் பகுத்தறிந்தவர்களாயும், எல்லாருக்கும் அநுகூலமாகப் பேசுபவர்களாயு மிருந்தார்கள்."

இனி வள்ளுவர் வாக்கையும் பெயர்த்தெழுதிப் பின் கம்பரது செய்யுள்களையும் பகர்ந்து, அமைச்சர் திறத்தில் நம் கவிக்கரசு கொண்டுள உட்கருத்து யாதென உணர முயல்வோம்.

# மதிப்புரை.

## நளாயினி வெண்பா.

[திருப்பத்தூர் கா. அ. சண்முக முதலியாரவர்கள் இயற்றியது. விலை ரூ. 1 0 0. ஆனால், வாசகசாலைகளுக்கும் (லைபிரரி) பிரசங்கத்தமிழ் வித்வான்களுக்கும் ஒவ்வொரு புத்தகம் இலவசமாய்க் கொடுக்கப்படும் என்றும், வேண்டுவோர் தபால் செலவுக்காக மூன்று அணு ஸ்டாம்புடன் விபரமான முழுவிலாசமும் எழுதியனுப்பும்படியும் ஆசிரியர் தெரிவிக்கின்றார். அவரது விலாசம், கா. அ. சண்முக முதலியார் நூல்மளிகை, திருப்பத்தூர், என்பது.]

காதலனுகியும் ஏதிலன்போல் நளன் கானகத்துக் காரிருளில் பாழ்மண்டபத்தே தமயந்தியை நீத்தகன்றபின், அவள் வாளரவின் வாய்ப்பட்டும் சிலைவேடன் கைப்பட்டும் பிழைத்துச் சேதிநக ரடைந்து, அங்கிருந்து தன்னக ரெய்தித் தனதன்னைக்குத் துயர்கூர் தன் சரிதத்தை எடுத்துரைத்தபோது, அத் தாயானவள், "என் அருமைமகளே, செல்வமெலா மிழந்துநீ கடுஞ்சுரம் செல்லுங்கால் எவ்வளவு வருந்தினையோ; மக்களைப் பிரியுங்கால் உனதுயிர் எப்படித் துடித்ததோ; பாம்பின் பேழ்வாயுள் மூழ்குங்கால் உடலுமுயிரும் பதைத்தவா றெவ்வாறோ! தீத்தொழில் வேடன் துரத்த நீ உயிர்நிலைதளர்ந்து ஓடியபோது உற்றதுயர் எத்தகைத்தோ; உனது வாழ்வும் வைபவமும் இழந்து இச்சிறுமை எய்தியிருக்கத் தரிக்கின்றாயோ!" என்று இவையனைய இயம்பிப் பரிவுபாராட்டி யிருப்பாளாயின் இந்நிலைக்கு அது தக்கதேயெனத் தோன்றலாமெனினும், கற்பின் தத்துவமும் அக்கற்பிற்கு அரசியாய தன் மகளது தன்மையையும் நன்குணர்ந்த வீமன்தன் தேவி, இவை போன்றன வொன்றும் வினவாமல்,

> பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை
> நினையாது நீத்தகன்ற போது—தனியேநின் [னுள்
> றென்னினைத்தா யென்செய்தா யென்னுப் புலம்பி

என்றே, நாயகனைப் பிரிவதிலும் பெருந்துயர் இவட்கில்லாமையை யுட்கொண்டு பரிவுகூர்ந்தனள் என்னப் புகழேந்திப்புலவர் காட்டுவதின் அருமை அளவிடற்பாலதன்று. அன்னவள் மாமகள் அரவின்வாய் வருந்தியபோதும் தன்னை நீத்தகன்ற நாயகன் சென்ற நெடுந்திசை நோக்கிக் கரங்குவித்து, உயிரும் தன்னுடைமை அன்றெனும் பான்மையில் அதனை விடுதற்கும்—அவன் திருமுகம் அன்று காணத குறையொன்றே யுடையளாய்—விடைகேட்டு நின்றிருந்தாள். இத்தகையதோர் பரம்பரையில் தமயந்தியின் வயிற்றில் வாய்த்த இந்திரசேனை கற்பின் பெருமையால் தலைசிறந்து விளங்கிய சரிதத்தை நமது ஆசிரியர் சண்முகமுதலியாரவர்கள் நேரிசைவெண்பா நானூற்றுப் பதினென்றால் பாடிய நூலைக் கா ண நாம் பெரிதும் மகிழ்கின்றோம்.

நளாயனி என்ற மறுபெயருடைய இவ்விந்திரசேனையின் வரலாற்றை இத்தமிழகத்திற் பெரும்பான்மையோ ரறிவாராயினும் அதனை ஒரு சிறுகாப்பியமாக அமைத்துத் தந்ததால் இவ்வாசிரியர் செய்துள உதவி சிறியதன்று. அதுவுமன்றி, ஒவ்வொரு செய்யுளும் யாவருக்கும் நன்கு விளங்கும்படி தாமே குறிப்புரைகளும் வரைந்திருப்பதுதக்கதே. இந்நூலைத் தாம்" இயற்றிக் கைப்பொருள் செலவிட்டு வெளியாக்கியது, நந்தமிழுலகச் சிறமிகளும்சிறுவர்களும்கொண்டதேகோலம் கண்டதே காட்சி உண்டதேயின்பம் உறக்கமேதுறக்கம் எனமதிக்கும் புதிய திருத்தவிடக் காற்றிற்படாது கற்பெனும் வயிரக்கவசம் பூண்டு நல்லறம் வழாது இல்லறம் நடாத்தி மக்கட்பிறப்பிற் குரிய தக்கவாழ்வெய்துக, என்னும் பேரவாவேயாம்" என்ன இவ்வாசிரியர் கொண்டுள நோக்கத்தை நாம் முழுமனதுடன் பாராட்டுகின்றோம். தற்காலம் ஆடவர் மகளிர் என்றிருபாலார்தம் தனியியல்பு தலைதடுமாறி இரண்டிற்குங் கேடானவோர் நெறியில் செலுத்தப்படுகின்ற தென்பதை உணரவல்லார் மிகச்சிலரில் நமது ஆசிரியரும் ஒருவராயிரிப்பதுமன்றி அதனை எடுத்தியம்பும் வீரமும் அவர்பாலிருப்பது காண அவரைப்பெரிதும் வழுத்துகின்றோம்.

செய்யுள்களெல்லாம் நன்கு அமைந்திருக்கின்றன. கதையின் தொடர்ச்சியும் நன்றாகக் காகக்கப்பெற்றிருக்கின்றது.

> சும்மா கிடைக்குமோ தோகை யணிமன்ற
> லம்மா வெனநோற் றருள்பெற்றச்—செம்மாந்தாங்
> கக்கோலத் தோடுற்ற வங்கசனே யாம்போலுந்
> தக்கோனங் குற்ற தகை

என மௌளத்கலியமுனிவன் அழகியவடிவங்கொண்டு வருதலை வருணித்திருத்தலும்,

> "செய்தவனும் யானீயோ செய்த தவத்தனும்"

என அம்முனிவன் நளாயினியை நளனிடம் வியந்துரைத்தலும்,

> சாதிக்கின் றுளேதஞ் சற்றும் புரியாது
> போதிக்கின் றுள்கற்பின் பொற்பெல்லாஞ்—சோதிக்க
> வந்தேனை நெஞ்ச வலிகாண வேபோலுஞ்
> செந்தேனை முந்துரையாள் சேர்பு

என்று முனிவன் அவள் கற்புநிலை காக்கும் உறுதியைப் பாராட்டுவதும், இவை போன்ற பலசெய்யுள்கள் இந்நூலிற்கு அழகும் பெருமையும் அளித்து நிற்கின்றன.

தொழுநோய் தொடர்ந்தவொரு முனிவனைக் கணவனாய்க்கொண்டு அவனுக்குத் தொண்டுபுரிந்து வந்தது மல்லாமல் பரத்தையோடு அவனைச் சேர்பிக்கவுஞ் செய்தவொரு கோமகள்தன் சரிதை கோடிபெறும். தற்காலம் வாய்தந்தன விளம்புவதல்லால் எப்பொருட்கும் மெய்ப்பொருள் காணவேண்டுமெனும் ஊக்கமில்லா மாந்தர் சிலர், மகளிரை ஆடவர் அடிமைகளாக்கிய பகுதியில் இதனைச் சேர்த்துவடுவர். இது பெண்மையின் பெருமையை அறியாமையால் கழறுவதன்றி வேறன்று. மாதரார் பெருமை உண்மையில் எதனால் விளங்குகின்ற தென்பதைப் பிரான்ஸ் தேசத்துக் கலைஞர் H. A. டேய்ன் (H. A. Taine) என்பார், ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் என்பவரது நாடகபாத்திரங்களின் பெண்களாயினோர் குணகுணங்களைச் சீர்தூக்கி வரையுங்கால் அவர் பெண்மைக்குரிய உண்மை நிலையும் பெருமையும் இவையிவையென உரைப்பனயாவும், பண்டையிந்தியர் கண்டுள கருத்துக்களுக்கு முற்றிலும் ஒத்திருக்கக்கண்டு வியக்கின்றோம். ஆதலின் அதனை இச்செவ்வியில் ஈண்டுவரைவோம்.

(தொடரும்)




## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை



## நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.



## ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5—8—0. V. P. Charge Extra.**

*MANAGER:—*

**KALANILAYAM,**
**11, VELLALA STREET,**
Purasawalkam, MADRAS.

# OUR OWN PUBLICATIONS

**THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614**

*by* THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

**THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES**

*by* K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

**THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905**

*by* POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

**ECONOMIC DEVELOPMENT :**

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

**LIFE OF BARRISTER SAVARKAR**

*by* CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

**HINDU PAD-PADASHAHI :**

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

**ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA**

*by* V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

**LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION**

*by* MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

**DIALOGUE DIVINE AND DRAMATIC**

*by* GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினுவிடை கா.ர. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. ஸிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12 ஷ்ஷ இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பாசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணுகோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்-S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II ,, **As. 4.**
23. Book III ,, **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

**(V. P. Charges, Extra of the Prices.)**

**B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.**




# வர்த்தமானம்

## கலா நிலயம்

### வாழ்த்துக்கவி

நேரிசை வெண்பா

காரார் கடலுலகிற் கற்றறிந்தோர் தம்மாட்டுச்
சீரார் விடயமுடன் சென்றுலவும்—பேரார்
கலாநிலய மாஞ்செல்வி கான்றிகழ வாழி
நிலாவிரவி யுள்ளவரை நின்று.

*கணியூர் உ. சுப்பராய செட்டியார் அவர்கள்.*

---

**தமாஷாவரி:**—தமாஷாவரி இப்பொழுது 6 அணு டிகட்டுமுதல் போடப்பட்டிருக்கிறது. பம்பாய்ச் சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமான் ஜி. பி தேசாய் ஒரு ரூபாய்க்குக் குறைவான டிகட்டுகளின்மேல் இவ்வரி போடக்கூடாது என்பதை ஒட்டிய ஒரு மசோதாவை, அடுத்தசட்டசபைக் கூட்டத்தில் யோசனைக்கு விடுவார் என்று பம்பாய்ச்செய்தி கூறுகிறது.

* * *

**வங்காள மாணவர்:**—இந்தியாவில் சுயராஜ்ய அரசாங்கம் ஒன்றை (Paralel Government) நிர்மாணிப்பதற்காக முயன்றனரென்று 12 வங்காளச் சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்பட்டனரென்றும், 17-ந் தேதியன்று மாஜிஸ்டிரேட்டு இதுவிஷயமாய் உத்திரவு பிறப்பிப்பார் என்றும் வங்காளச் செய்தி கூறுகின்றது.

* * *

**சட்டசபை பகிஷ்காரம்:**—வங்காளப் பிரதிநிதிகளில் பலர் சட்டசபை பகிஷ்காரத்திற்கு விரோதமாயிருந்தாரெனினும், காங்கிரஸ் மஹாநாடு சட்டசபையைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டதால் வங்காளிகள் சட்டசபைப் பதவியை ராஜிநாமாச் செய்துவருகின்றனரென்றும், இதுவரை 60 வங்காளப் பிரதிநிதிகள் ராஜிநாமாச் செய்துவிட்டனர் என்றும் தெரிகின்றது.

* * *

**ஜம்நதாஸ் மேட்டா:**—பம்பாய்மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியான ஸ்ரீ ஜம்நதாஸ்மேட்டா தமது பதவியை ராஜிநாமாச் செய்து கூறியதாவது:-

எனக்குச் சட்டசபை பகிஷ்காரத்தில் நம்பிக்கையில்லை. சட்டசபையைக் காங்கிரஸ்காரர்கள் பகிஷ்கரிப்பதால் நாட்டிற்கு நன்மை ஏற்படாது. அதிகாரிகளுக்கே நன்மைதரும். நான் மறுஎலக்ஷனுக்கு நிற்பேனோ, என்னவோ? என்றாலும் சட்டசபையினிடம் நம்பிக்கையுள்ள நான் இனியும் காங்கிரஸ் கமிட்டியில் இருப்பதால் கமிட்டியின் காரியம் செவ்வனே நடைபெற இயலாது. ஆகவே சட்டசபைப் பகிஷ்காரத்தில் நம்பிக்கை உள்ள ஒருவரே காரியதரிசியாயிருக்கவேண்டும்.

* * *

**சென்னைச் சட்டசபையினர்:**—இவ்வாரம் சென்னைச் சட்டசபையில் அங்கத்தினர்களான காங்கிரஸ்காரர்கள் ஸ்ரீமான் எஸ் சத்தியமூர்த்தி ஐயர் வீட்டில் கூடினர். ஸ்ரீமான்களான முத்துரங்க முதலியார், ஸாமி வெங்கடாசலம் செட்டியார், ஸி எஸ். கோவிந்தராஜ முதலியார், ஸி. வெங்கடரங்கம் நாயிடு, கே. பாஷ்யம், டாக்டர் ராமராவ் முதலிய பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். இக்கூட்டத்தார் சட்டசபை பகிஷ்காரத்தை ஏற்கவில்லை. ஆனால் இப்பொழுது பதவிகளை ராஜிநாமாச் செய்து விடுவதென்றும், அடுத்த தேர்தலில் சட்டசபை செல்வதென்றும் தீர்மானித்தனர். இதற்கென ஒருகட்சியும் சேர்க்கப்படும் என்று தெரிகிறது

* * *

**ஆமதாபாத்தில் கல்வி மஹாநாடு:**—இவ்வாரம் காந்தியடிகள் தலைமையில் தேசியக்கல்வி விஷயமான மஹாநாடு கூடிற்று. பல தேசியக் கல்வி நிலையத்தார் இம்மஹாநாட்டிற்கு வந்திருந்தனர். இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பெற்ற விஷயங்களின் சுருக்கம் வருமாறு:—

காலநிலையை யோசிக்குங்கால், தேசியக்கல்வி என்பது சுயராஜ்யம் பெறுவதற்குத் துணைநிற்குங் கல்வியேயாகும். நிற்க, கல்வி நிலயங்கள் சுயராஜ்யத்தின் பேரில் மாணவர்களுக்குக் காதலை உண்டாக்குவதுடன் நிற்பதும் போதாது. சுயராஜ்யத்திற்கு வீரர்களைத்தரும் முறையில் பயிற்சி செய்துவைக்க வேண்டுவதே தேசீயக் கல்வியின் வேலையாகும்.

கல்வி நிலையங்கள் தொழிற்கல்வியை முக்கியமாகப் போதிக்கவேண்டும். படித்தவர் உத்தியோகத்தை எதிர் பார்க்காது ஜீவனத்திற்குரிய பொருளைத் தேடிக்கொள்ளும் திறமை பெறவேண்டும். தொழிற் கல்வி இல்லாமையாலேதான் நமது வேலைக்கு ஊக்கமளிக்கவல்ல படித்தவர் போதுமானபடி இல்லை. அத் தொழிற்கல்வியும் தேசநலத்திற்கேற்றதாய் இருக்க வேண்டும்.

கல்விச்சாலைகளில் மதம் போதிக்கவேண்டாமா? தேசீயத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தம் உண்டா? இல்லையா? மதம் தேசீய இயக்கத்தினின்று விலக்கப்பட்டதால் நமக்கும், நமது நாட்டிற்கும் நஷ்டம் உண்டா? இவ்விஷயம் யோசிக்கப் பெறவேண்டும்.

ஓய்வு அதிகமாகவுள்ள ஒரு சில வகுப்பாருக்குக் கொடுக்கப்படும் கல்வி தேசீயக்கல்வி யாகுமா? தேக உழைப்புடைய பொது ஜனங்களின் நன்மைக்கானது தேசீயக்கல்வியா? அல்லது வேறொன்றா?

மாணவர்கள் படித்தபிறகு உலக அனுபவம் பெறும் பொருட்டு யாத்திரை செய்ய வேண்டுவது அவசியம். எத்தகைய யாத்திரையை அவர் மேற்கொள்ளவேண்டும் என்பதுபற்றி முடிவு செய்யவேண்டும்.

கலாசாலைகளில் இலக்கியம், சங்கீதம் சிற்பக்கலை, சித்திரக்கலை இவைகளுக்குரிய இடம் எது என்பதும் நிர்ணயிக்கப்படவேண்டும்.

ஹிந்துஸ்தானி பாஷை நாடெங்கும் பரவுவதற்காகக் கல்விச்சாலைகள் எவ்வழியில் முயலவேண்டும்.

உயர்தரப்படிப்பில் அந்தந்த மாகாணத்துத் தாய்ப் பாஷை மூலம் கல்விபோதிப்பதா? அல்லது ஹிந்தி பாஷை மூலம் போதிப்பதா? இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. இது விஷயமாயும் ஒரு முடிவு செய்ய வேண்டும்.

தேசீயப் பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களுக்கெனத் தேசீய முறையில் புத்தகங்கள் தயாரிப்பதற்குக் கல்விச்சாலையார் எல்லோரும் சேர்ந்து எவ்வழியில் முயலலாம்.

பெண்களுக்குத் தேசியக்கல்வி எம்முறையில் போதிக்கப்படவேண்டும்.

KALANILAYAM.
REG. No. M, 2324.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சுரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்ட தெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

**:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)